23.07.15

**கோவை வேளாண்மைப் பல்கலை.யில் முதுநிலைப் படிப்புக்கான நுழைவுத் தேர்வு**

கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் முதுநிலை பட்டப் படிப்புகளில் சேருவதற்கான நுழைவுத் தேர்வு புதன்கிழமை நடைபெற்றது.

இப் பல்கலைக்கழகத்தில் வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் விரிவாக்கம், மண்ணியல், பூச்சியியல், வேளாண் பொறியியல் உள்ளிட்ட 33 முதுநிலை பட்டப் படிப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த நிலையில், 2015-16 ஆம் கல்வி ஆண்டுக்கான மாணவர் சேர்க்கைக்கு கடந்த 3-ஆம் தேதி அறிவிப்பு வெளியாகி இருந்தது. தேர்வுக்கு ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்க கடைசி நாளான ஜூலை 20-ஆம் தேதி வரையிலும் 1,684 மாணவ-மாணவிகள் விண்ணப்பங்களை அனுப்பியிருந்தனர்.

இவர்களில் 540 பேர் வெளி மாநிலங்களைச் சேர்ந்தவர்கள். இவர்களுக்கான நுழைவுத் தேர்வு பல்கலைக்கழக வளாகத்தில் புதன்கிழமை பிற்பகலில் நடைபெற்றது. இந்தத் தேர்வுக்கான முடிவுகள் வரும் 28-ஆம் தேதி வெளியாகும். இதையடுத்து சேர்க்கை நடைமுறைகள் தொடங்கும்.

**களைப்பில்லாமல் "களை' எடுக்க கருவிகள்!**



நெல் சாகுபடியில் விதைப்பு, நாற்று நடுதல், அறுவடை செய்தல், கதிரடித்தல் போன்ற பல வேலைகளை விவசாயிகள் இயந்திரங்களைக் கொண்டு தற்போது எளிதாகச் செய்கின்றனர். பொதுவாக, களை எடுப்பது மட்டும் மனித சக்தியின் மூலமாகவே நடைபெறுகிறது. ஆனால் மனிதனால் களை எடுத்தல் என்பது மிகவும் கடினமான வேலையாகவும் அதிக நேரம் ஆகக் கூடியதாகவும் உள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு களை எடுத்தலை எளிமைப்படுத்தவும், விரைவுப்படுத்தவும் பல்வேறு விதமான களை எடுக்கும் கருவிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. குறைந்த நேரத்தில் குறைந்த செலவில் களை கட்டுப்படுத்தப்பட்டு விளைச்சல் அதிகரிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

களை எடுக்கும் கருவியின் மூலம் நிலத்தில் இருந்து களைகள் அனைத்தும் வெளியேற்றப்படுவதால் அவைகள் நிலத்தில் இருந்து எடுத்த உரங்கள், ஊட்டச் சத்துகள் அனைத்தும் வெளியேற்றப்படுகின்றன. நெற்பயிரின் வேர்ப் பக்கத்திலுள்ள மண், களை எடுத்த பின்பும் இறுக்கமாகவே இருக்கும். மேலும் களை எடுப்பதும் மண்ணின் தன்மையைப் பொறுத்து கடினமாகிறது.

களைகளை கருவிகளைக் கொண்டு எடுப்பதால் பல்வேறு பயன்கள் உள்ளன. அதிக தூர்கள், குறைந்த வேலை ஆள்கள், களைகளை அவைகளின் இளம் பருவத்திலேயே மண்ணிலேயே அமுக்கி விடுவதால் உள்கொள்ளும் சத்துக்களின் அளவு குறைந்து பயிருக்கு சத்துக்கள் அதிக அளவில் கிடைக்க வாய்ப்பு, களைகள் கட்டுப்படுத்தப்பட்டு அவை வயலுக்கே இயற்கை உரமாகவும் மாற்றப்படுதல், உருளும் களைக்கருவி மண்ணை பிரட்டி விடுவதால் காற்றோட்டம் கிடைத்தல், மண்ணிலுள்ள நுண்ணுயிரிகள் ஊக்குவிக்கப்படுதல், மேலுரம் இடும் சமயத்தில் உரமிட்டபின் களை எடுக்கும் கருவியைப் பயன்படுத்த வாய்ப்புள்ளதால் உரங்கள் மண்ணில் கலந்து உபயோகத் திறன் அதிகரித்தல் ஆகிய பயன்கள் உள்ளன.

களை எடுக்கும் கருவிகளில் பல வகை இருக்கின்றன. 1. ஒரு வரிசை நட்சத்திர வடிவ உருளும் களை எடுக்கும் கருவி, 2. இரண்டு வரிசை உருளும் களை எடுக்கும் கருவி, 3. சாய்வு உருளை களை எடுக்கும் கருவி, 4. மேம்படுத்தப்பட்ட சாய்வு வடிவ உருளை களை எடுக்கும் கருவி, 5. மின் கலத்தினால் இயங்கும் சிறிய களை எடுக்கும் கருவி ஆகியன உள்ளன.

நட்சத்திர வடிவ உருளும் களை எடுக்கும் கருவி: இந்தக் களை எடுக்கும் கருவியானது களை எடுக்கும் உருளை, கைப்பிடி, நட்சத்திர வடிவ உருளை, மிதவை, உருளையை தாங்கும் சட்டம் ஆகியவற்றை கொண்டது. மிதவை களை எடுக்கும் உருளைக்கு முன்னால் பொருத்தப்பட்டு களை எடுத்தலை விரைவுபடுத்துகிறது. களை எடுக்கும் உருளையும் மிதவையும் பிரதான சட்டத்துடன் பொருத்தப்பட்டு முதன்மைக் கைப்பிடியுடன் இணைக்கப்பட்டுள்ளதால் களை எடுத்தல் எளிமையாகிறது.

சாய்வு உருளை களை எடுக்கும் கருவி: இந்தக் கருவியை வரிசையில் நடவு செய்யப்பட்ட வயல்களில் மட்டுமே பயன்படுத்த முடியும் இந்தக் கருவியை முன்னும் பின்னுமாக அசைத்து இயக்கும்போது உருளைப்

பகுதியில் உள்வளைந்த கத்தி போன்ற அமைப்பு களையை வேருடன் பிடுங்கிப் போடுகிறது. கருவியை இயக்கி செல்பவர் அவற்றின் மீது நடந்து செல்லும்போது களைகள் மண்ணுக்குள் மிதிக்கப்பட்டு மக்கி அழுகுவதற்கு ஏதுவாகிறது.

மின் கலத்தினால் ஆன களை எடுக்கும் கருவி: களையெடுத்தலை துரிதப்படுத்தும் நோக்கத்துடனும் மின் கலத்தினால் இயங்கும் களை எடுக்கும் கருவி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்தக் கருவியைக் கொண்டு களை எடுப்பவருக்கு பெரிதாக களைப்பு ஏற்படுவதில்லை. இக்கருவியில் களை எடுக்கும் உருளை சுழன்று களைகளை வேரோடு பிடுங்கி எடுக்கிறது. மேலும் களைகள் மண்ணோடு சேர்க்கப்படுவதால் அவை நன்கு மக்கி உரமாகின்றன. இது மண்ணின் காற்றோட்டத்தையும் நுண்ணுயிரிகளின் செயல்பாட்டையும் அதிகப்படுத்தி அதிக மகசூலுக்கு வழிவகுக்கிறது.

இந்தக் கருவிகள் குறித்த மேலும் விவரம் தேவைப்படும் விவசாயிகள் அவர்களது பகுதிகளில் உள்ள வேளாண் அலுவலகங்களை அணுகலாம் என தமிழக அரசு வேளாண்மைத் துறை தெரிவித்துள்ளது.

"களை எடுத்தலை எளிமைப்படுத்தவும், விரைவுப்படுத்தவும் பல்வேறு விதமான களை எடுக்கும் கருவிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. குறைந்த நேரத்தில் குறைந்த செலவில் களை கட்டுப்படுத்தப்பட்டு விளைச்சல் அதிகரிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது."

**அதிக லாபம் தரும் சப்போட்டா சாகுபடி!**



அனைத்துத் தரப்பினரும் விரும்பி உண்ணக்கூடிய சப்போட்டாவை, சாகுபடி செய்தால் ஆண்டுக்கு, ஒரு ஹெக்டேருக்கு 15 முதல் 25 டன் வரை மகசூல் கிடைப்பதுடன் அதிக லாபமும் கிடைக்கும் என தோட்டக் கலைத் துறையினர் தெரிவித்தனர்.

இதைப் பயிரிடும் வழிமுறைகள் குறித்து தோட்டக்கலைத் துறை அதிகாரிகள் கூறியது:

சப்போட்டா என்பது அனைத்துத் தரப்பினரும் விரும்பி உண்ணக் கூடிய பழமாகும். சப்போட்டா ஒரு வெப்ப பிராந்தியப் பயிராகும். கடல் மட்டத்தில் இருந்து 1,000 மீட்டர் உயரம் வரை நன்கு வளரும். எல்லா விதமான மண்ணிலும் சப்போட்டாவை பயிரிடலாம். நடவுச் செடி தேர்வு: பலாவேர் செடியில் ஒத்து கட்டிய 2 அல்லது 3 கிளைகளைக் கொண்ட ஒட்டுச் செடிகள் நடவுக்கு ஏற்றவையாகும். சப்போட்டாவுக்கு ஜூன், நவம்பர் மாதங்கள் ஏற்ற பருவமாகும்.

இடைவெளி: இதற்கான குழிகளை 1 மீட்டருக்கு 1 மீட்டர் என்ற அளவில் 8 மீட்டர் இடைவெளியில் வெட்டவும். ஒரு குழிக்கு 10 கிலோ

தொழுவுரம், ஒரு கிலோ வேப்பம் பிண்ணாக்கு, மேல் மண், 100 கிராம் லிண்டேன், 1.3 சதவீத சதத்தூள் ஆகியவைகளை கலந்து இட்டு குழிகளை நிரப்ப வேண்டும்.

பின்பு ஒட்டுச் செடிகளை சட்டியில் இருந்து பிரிக்கும் போது வேர்ப் பகுதியில் உள்ள மண் சிதைந்து விடாமல் குழியின் நடுவில் சிறிய பள்ளம் எடுத்து அதனுள் செடியை வைத்து செடியைச் சுற்றி மண்ணைத் தள்ளி நன்றாக அணைக்க வேண்டும். நடவு செய்யும்போது ஒட்டுப் பகுதி தரைமட்டத்தில் இருந்து 15 செண்டி மீட்டர் உயரத்தில் இருக்குமாறு நடவு செய்ய வேண்டும். செடிகள் காற்றில் சாய்ந்து விடாமல் இருக்க செடிகளுக்கு பக்கவாட்டில் 2 குச்சிகளை வைத்து சணல் போன்ற மெதுவான கயிறு கொண்டு கட்டி விட வேண்டும்.

உரமிடுதல்: முதல் வருடத்தில் தொழுவுரம் 10 கிலோ, தழைச்சத்து 200 கிராம், மணிச் சத்து 200 கிராம், சாம்பல் சத்து 250 கிராம் ஆகியவற்றை கலந்து இட வேண்டும். ஆண்டு தோறும் இதே அளவில் உரமிட வேண்டும். ஆறாவது ஆண்டில் 50 கிலோ தொழு உரம், தழைச்சத்து 1 கிலோ, மணிச்சத்து 1 கிலோ, சாம்பல் சத்து 1.5 கிலோ என்ற அளவில் உரமிட வேண்டும்.

பின்செய் நேர்த்தி: வேர்ச் செடி கிளைகளை நீக்க வேண்டும். குறுக்கு நெடுக்காக செல்லும் கிளைகளை கவாத்து செய்ய வேண்டும். மகசூலை அதிகரிக்க 0.1 சதவீதம் போரிக் அமிலத்தை தெளிக்க வேண்டும்.

ஊடுபயிர்: சப்போட்டா காய்ப்புக்கு வரும் வரை ஊடுபயிராக பயிறு வகைப் பயிர்கள், காய்கறி பயிர்களை பயிரிட்டால் நல்ல பலன் கிடைக்கும்.

பயிர் பாதுகாப்பு: இலை சுருட்டுப் புழு தாக்கினால் மோனோ குரோட்டோபாஸ் 2 மில்லி அளவை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். இதே அளவில் தேவைப்படும் அளவுக்கு தெளிக்கலாம்.

மொட்டுப் புழு, கம்பளிப் புழு: இதற்கும் மோனோ குரோட்டோபாஸ் 2 மில்லி அளவை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

கரிப்படலம் நோய்: ஒரு கிலோ மைதாவை 4 லிட்டர் தண்ணீரில் கொதிக்க வைத்து அதில் கலக்க வேண்டும். பின்னர் அதை பரவலாகத் தெளிக்க வேண்டும்.

அறுவடை: ஒட்டுச் செடிகள் நட்ட 3 முதல் 4 வருடங்களில் பலன் கொடுக்கத் தொடங்கும். அறுவடையை பிப்ரவரி, ஜூன் மாதங்களிலும், செப்டம்பர்-அக்டோபர் மாதங்களிலும் செய்யலாம். பழங்களை பழுக்க வைப்பதற்கு 10 கிராம் சோடியம் ஹைட்ராக்சைடு மாத்திரையை எத்ரல் 5000 பிபிஎம் கலவையுடன் கலந்து காற்று புகாத அறையில் வைக்க வேண்டும். விவசாயிகள் இந்த முறைகளை முழுமையாகக் கையாண்டால் ஆண்டுக்கு 15 முதல் 25 டன் வரையில் மகசூல் கிடைக்கும் என தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் அலுவலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

**"சுற்றுச்சூழல் விழிப்புணர்வு பழந்தமிழர் வாழ்வியலின் ஓர் அங்கம்'**

சுற்றுச்சூழல் விழிப்புணர்வு என்பது பழந்தமிழர் வாழ்வியலின் ஓர் அங்கமாக இருந்தது என்று தமிழ் வளர்ச்சித் துறைச் செயலர் மூ. ராசாராம் கூறினார்.

உலகத் தமிழ்ச் சங்கம் சார்பில், "பழந்தமிழர் சுற்றுச்சூழல் சிந்தனைகள்' என்பது குறித்த கருத்தரங்கம் மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் புதன்கிழமை நடைபெற்றது. கருத்தரங்கைத் தொடக்கி வைத்து பள்ளிக் கல்வி அமைச்சர் கே.சி. வீரமணி பேசியதாவது:

உலகத் தமிழர்களை ஒருங்கிணைக்கும் நோக்கத்துடன் உலகத் தமிழ்ச் சங்கம் புதுப்பொலிவுடன் செயல்பட தமிழக முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். உலகத் தமிழ்ச் சங்கத்துக்கு ரூ.25 கோடியில் பெருந்திட்ட வளாகம் கட்டப்பட்டு வருகிறது என்றார்.

கூட்டுறவுத் துறை அமைச்சர் செல்லூர் கே.ராஜூ: குடும்ப அமைப்பு,

சமூக அமைப்புக்கு பண்டைய தமிழர்கள் முக்கியத்துவம் அளித்தனர். கலாசாரத்தைப் போற்றிப் பாதுகாத்தனர். எந்தவொரு உயிரினத்தின் வாழ்வியலையும் மாற்றவில்லை. இயற்கையைப் போற்றி வணங்கினர். இப்போது இவையெல்லாம் மாறுதலுக்கு உள்ளாகி உள்ளன. கலாசாரத்தை பாதுகாக்க வேண்டியது நமது கடமை. தமிழ் வளர்ச்சி, செய்தித் துறைச் செயலர் மூ. ராசாராம்: பழங்காலத் தமிழர்களின் வாழ்வியலும், இயற்கையும் ஒன்றையொன்று சார்ந்து இருந்ததை சங்க இலக்கியங்களில் காண முடியும். ஐவகை நிலங்கள் இயற்கையைச் சார்ந்தே வகுக்கப்பட்டன. ஒவ்வொரு நிலத்துக்கும் ஏற்ற பறவை, விலங்கு, பூ, மரம், செடி, கொடி என வகைப்படுத்தப்பட்டன. சுற்றுச்சூழல் விழிப்புணர்வு என்பது பழங்காலத் தமிழர்களின் வாழ்வியலாகவே இருந்தது என்றார்.

கருத்தரங்கில், மாவட்ட ஆட்சியர் எல். சுப்பிரமணியன், சட்டப்பேரவை உறுப்பினர்கள் எம்.வி. கருப்பையா, ஆர். சுந்தர்ராஜன், பேராசிரியர் கு. ஞானசம்பந்தன், உலகத் தமிழ்ச் சங்க தனி அலுவலர் க. பசும்பொன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

**பலத்த மழை: பொதுமக்கள் மகிழ்ச்சி**

திருவள்ளூர், அதன் சுற்றியுள்ள பகுதிகளில் புதன்கிழமை மாலை பலத்த மழை பெய்ததால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். திருவள்ளூர், சுற்றியுள்ள பகுதிகளில் புதன்கிழமை காலை 9 மணி முதல் வெயில் கடுமையாக வாட்டியது. இதனால் சாலையோர குளிர்பானக் கடைகள், கரும்பு, சாத்துக்குடி சாறு கடைகளில் மக்களின் கூட்டம் அலைமோதியது. இந்த நிலையில் மாலை 4 மணியளவில் திடீரென கருமேகம் சூழ்ந்து பலத்த மழை பொழிந்தது. ஒரு மணி நேரம் இடைவிடாது பெய்த பலத்த மழையால் பூமி குளிர்ந்து இதமான காற்று வீசியது. இதனால் மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். அதேசமயம்

திருவள்ளூர் நகரில் நடைபெறும் பாதாள சாக்கடைப் பணியால் வாகன ஓட்டிகள் சிரமத்துக்குள்ளாயினர்.

இதுகுறித்து வாகன ஓட்டிகள் கூறுகையில், திருவள்ளூர் நகராட்சியில் கடந்த 7 ஆண்டுகளாக ஆமை வேகத்தில் நடைபெற்று வரும் பாதாள சாக்கடைப் பணியை விரைந்து முடிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

**நாளை விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை (ஜூலை 24) காலை 11 மணிக்கு விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெற உள்ளது.

மாவட்ட ஆட்சியர் ந.வெங்கடாசலம் தலைமையில் நடைபெற உள்ள கூட்டத்தில் விவசாயிகள் மற்றும் விவசாயிகள் சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு தங்களது கோரிக்கைகளை தெரிவித்து தீர்வு காணலாம் என்று மாவ்ட நிர்வாகம் அறிவித்துள்ளது.

**தாராபுரம் விதைப் பண்ணைகளில் அதிகாரிகள் ஆய்வு**

தாராபுரம் மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் உள்ள விதை உற்பத்தி, சுத்திகரிப்பு நிலையங்களில் அதிகாரிகள் குழுவினர் புதன்கிழமை ஆய்வு மேற்கொண்டனர்.

கோவை விதை சான்று இணை இயக்குநர் ஆர்.பழனிச்சாமி, உதவி இயக்குநர் எஸ்.சின்னச்சாமி தலைமையிலான அதிகாரிகள் குழுவினர் இந்த ஆய்வுப் பணியில் ஈடுபட்டனர். எதிர்வரும் சம்பா பருவத்தை முன்னிட்டு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ள தேர்ச்சி பெற்ற விதைகள் மற்றும் சுத்திகரிப்பு பணி நிறைவு பெற்றுள்ள விதை ரகங்களை ஆய்வு செய்தனர்.

மேலும், விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் விதைகள் கிடைக்க நடவடிக்கை எடுக்க விதை சான்று அலுவலர்கள் மற்றும் விதை உற்பத்தியாளர்களுக்கு அதிகாரிகள் உத்தரவிட்டனர். ஆய்வின்போது,

விதை சான்று அலுவலர்கள் மாரிமுத்து, மாரியப்பன், மோகனசுந்தரம், கோகுலவாசன், சுந்தரமூர்த்தி ஆகியோர் உடனிருந்தனர்.

**நிலத்தடி நீரை உறிஞ்சும் நிறுவனத்திற்கு உரிமம் வழங்கக் கூடாது: விவசாயிகள் மனு**

அவிநாசி அருகே, அசநல்லிபாளையத்தில் நிலத்தடி நீரை உறிஞ்சி விற்பனை செய்யும் நிறுவனத்திற்கு உரிமம் வழங்கக் கூடாது என விவசாயிகள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மனு அளித்தனர். இதுகுறித்து, அசநல்லிபாளையம் ஊர் மக்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அலுவலகம் அகியவற்றில் கொடுத்த மனு விவரம்:

வேட்டுவபாளையம் ஊராட்சிக்கு உள்பட்ட அசநல்லிபாளையத்தில் மணிமலர் ஃபுட் புராடக்ட் என்னும் தனியார் குடிநீர் விற்பனை நிறுவனம் செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனத்தினர் ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து தினமும் ஒரு லட்சம் லிட்டருக்கும் அதிகமான நீரை உறிஞ்சி எடுத்து விற்பனை செய்து வருகின்றனர்.

இதனால், மக்களின் நீர் ஆதாரம், பாதிக்கப்படுவதுடன், விவசாயத்திற்கு தேவையான நீருக்கும் பற்றாக்குறை ஏற்படுகிறது.

எனவே, இந்நிறுவனத்திற்கு உரிமமோ, இயங்குவதற்கான அனுமதியோ வழங்கக் கூடாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் ரூ. 85 லட்சத்திற்கு கொப்பரை ஏலம்**

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் ரூ. 85 லட்சத்துக்கு கொப்பரை ஏலம் புதன்கிழமை நடைபெற்றது.

பெருந்துறை மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதி விவசாயிகள் 1,950 மூட்டைகளில் 1,25,000 கிலோ கொப்பரையை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

இதில், முதல் தரக் கொப்பரை குறைந்தபட்சமாக கிலோ ரூ. 67.75-க்கும், அதிகபட்சமாக ரூ. 72.25-க்கும் விற்பனையானது.

இரண்டாம் தரக் கொப்பரை குறைந்தபட்சமாக கிலோ ரூ. 51.65-க்கும், அதிகபட்சமாக ரூ. 67.15-க்கும் விற்பனையானது.

இதில், மொத்தம் ரூ. 85 லட்சத்துக்கு ஏலம் மூலமாக விற்பனையானது என சங்கத் தலைவர் அருள்ஜோதி கே.செல்வராஜ் தெரிவித்தார்.

**மரவள்ளிக் கிழங்கு டன்னுக்கு ரூ.10,000 வழங்க வேண்டும்**

விவசாயிகளைக் காப்பாற்றும் வகையில், தமிழக அரசு மரவள்ளிக் கிழங்குக்கு டன்னுக்கு ஒன்றுக்கு குறைந்தபட்சம் ரூ.10,000 விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என தமிழக விவசாயிகள் சங்கத்தினர் வலியுறுத்தினர்.

தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில், மரவள்ளிக் கிழங்குக்கு குறைந்தபட்ச விலை நிர்ணயம் செய்யக் கோரி, சேலம் ஆட்சியர் அலுவலகம் அருகே புதன்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்துக்கு அந்தச் சங்கத்தின் மாநிலப் பொதுச் செயலர் கே.சுந்தரம் தலைமை வகித்தார். மரவள்ளி செடிகளுடன் மாநிலச் செயலர் சி.சின்னுசாமி உள்ளிட்ட 90-க்கும் மேற்பட்ட விவசாயிகள் சங்கத்தினர் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டம் குறித்து தமிழக விவசாயிகள் சங்கத்தின் மாநிலப் பொதுச் செயலர் கே.சுந்தரம் கூறியது:

சேலம், நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி உள்ளிட்ட 12 மாவட்டங்களில் மரவள்ளிக் கிழங்கு சாகுபடி செய்யப்படுகிறது. கடந்த ஆண்டு ரூ.7 ஆயிரத்துக்கு விற்பனையான ஒரு டன் மரவள்ளிக்கிழங்கு, தற்போது ரூ.4 ஆயிரத்துக்கு விற்பனை செய்யப்படுகிறது. உற்பத்தி செலவு அதிகரித்துள்ள நிலையில், விவசாயிகள் நஷ்டத்துக்கு விற்பனை செய்து, கடனைக் கட்ட முடியாமல் தற்கொலை செய்து கொள்ளக்கூடிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

அதனால், விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு தமிழக அரசு ஒரு டன் மரவள்ளிக் கிழங்குக்கு குறைந்தபட்சம் ரூ.10,000 விலை நிர்ணயம் செய்ய வேண்டும். பள்ளி, அங்கன் வாடிகளில் மாணவர்களுக்கு வழங்கப்படும் சத்துணவில் ஜவ்வரிசியினால் தயாரிக்கப்பட்ட உணவை வழங்க வேண்டும். இதன் மூலம் ஜவ்வரிசியின் தேவை அதிகரித்து, அதன் மூலம் மரவள்ளிக் கிழங்கின் விலையும் உயர வாய்ப்புள்ளது. கூட்டுறவு ஜவ்வரிசி ஆலைகளை நிறுவி அதன் மூலம் மரவள்ளிக் கிழங்கை கொள்முதல் செய்ய வேண்டும். எங்களது கோரிக்கைகளை நிறைவேற்றாவிட்டால் காலவரையற்ற உண்ணாவிரதம் உள்ளிட்ட பல்வேறு போராட்டங்களை நடத்துவோம் என்றார்.

**அரியலூரில் 3 மணி நேரம் பலத்த மழை**

அரியலூரில் செவ்வாய்க்கிழமை இரவு 3 மணிநேரம் தொடர்ந்து பெய்த மழையால் தாழ்வான பகுதிகளில் தண்ணீர் புகுந்தது.

செவ்வாய்க்கிழமை மாலை 6 மணியில் இருந்து பெய்யத்தொடங்கிய மழை, தொடர்ந்து 3 மணிநேரத்துக்கும் அதிகமாக நீடித்ததால், தெருக்களில் மழைநீர் வெள்ளமென பெருக்கெடுத்து ஓடியது. நகரில் பல ஆண்டுகளாக நடைபெற்றுவரும் புதை சாக்கடை திட்டப் பணிகள் முடிவடையாமல் சாக்கடைகள் அடைபட்டு கிடந்ததால், பெருக்கெடுத்து ஓடிய மழைநீர் தாழ்வான வீடுகள், கடைகளில் புகுந்தது. இதனால்,

பொதுமக்களும், வியாபாரிகளும் பெரிதும் அவதிப்பட்டனர். மழைநீரில் சாக்கடைநீரும் கலந்து வந்ததோடு, தவளை போன்றவையும் மழை வெள்ளத்தோடு வீட்டிக்குள் புகுந்ததால் தாழ்வான பகுதிகளில் குடியிருந்தோர் அச்சத்திற்கு ஆளாகினர்.

முழங்கால் அளவுக்கு தண்ணீர் ஓடியதாலும், மின்சாரம் இல்லாததாலும், தெருக்களில் நடந்துசெல்லவே மிகுந்த சிரமம் ஏற்பட்டது. குறிப்பாக, செந்துறை சாலை, கோசிநகர், பெரியதெரு, புறவழிச்சாலை அருகேயுள்ள கணபதி நகர், பேருந்து நிலையம் அருகேயுள்ள சடையப்ப படையாச்சிதெரு, எத்திராஜ்நகர் உள்ளிட்ட நகரின் தாழ்வான பகுதிளில் மழைநீர் சூழ்ந்ததால் பொதுமக்கள் மிகுந்த சிரமத்துக்கு ஆளாகினர். மேலும், செட்டிஏரியின் வரத்து வாய்க்காலின் பாலம் இடிந்து விழுந்ததால் ஏரிக்கு தண்ணீர் வருவது தடைபட்டது.

புதை சாக்கடை திட்டத்தை உரிய காலத்துக்குள் முடிக்காததே இதற்கு காரணம் என பொதுமக்கள் குற்றம்சாட்டினர். அரியலூர் 10-வது வார்டில் சடையப்பப் படையாச்சி தெருவைச் சேர்ந்த விஜயா, சரோஜா, வ.உ.சி. நகரைச் சேர்ந்த வள்ளியம்மை, கோசிநகரைச் சேர்ந்த வேம்பு, விஜயலட்சுமி, மஞ்சுளா, பானுமதி, சகுந்தலா, சூர்யா உள்ளிட்ட 14 பேரின் வீட்டுச் சுவர்கள் மழையால் இடிந்து விழுந்து அதிக அளவில் சேதமடைந்தன.

இதைத்தொடர்ந்து, அரியலூர் வட்டாட்சியர் வைத்தியநாதன், நகராட்சித் தலைவர் முருகேசன், நகராட்சி ஆணையர் (பொ) ரவிச்சந்திரன் உள்ளிட்டோர் மழையால் பாதிக்கப்பட்ட வீடுகளைப் பார்வையிட்டனர்.

**1050 டன் சன்னரக நெல் திருப்பூருக்கு அனுப்பிவைப்பு**

நீடாமங்கலத்திலிருந்து 1050 டன் சன்னரக நெல் அரைவைக்காக திருப்பூருக்கு புதன்கிழமை அனுப்பிவைக்கப்பட்டது. பாமணி மத்திய

சேமிப்புக் கிடங்கு மற்றும் ஆதனூர், அசேஷம், மூவாநல்லூர், துளசேந்திரபுரம், தெற்குநத்தம் ஆகிய ஊர்களில் உள்ள திறந்தவெளி சேமிப்பு மையங்கள் மற்றும் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் ஆகியவற்றிலிருந்து 87 லாரிகளில் 1050 டன் சன்னரக நெல் மூட்டைகள் நீடாமங்கலம் ரயில் நிலையத்துக்கு புதன்கிழமை கொண்டு வரப்பட்டது. இவை சரக்கு ரயிலின் 29 பெட்டிகளில் ஏற்றப்பட்டு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக அலுவலர்கள் முன்னிலையில் திருப்பூருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

**தனியார் விதைவிற்பனையாளர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி**

பெரம்பலூர் வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்தில் தனியார் விதை விற்பனையாளர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி புதன்கிழமை நடைபெற்றது.

பெரம்பலூர் மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் ஆறுமுகம் பயிற்சியை தொடக்கி வைத்து விதைகளின் முக்கியதுவம் குறித்து பேசினார்.

திருச்சிராப்பள்ளி விதை ஆய்வு துணை இயக்குநர் கு. முத்துக்கூரி விதை ஆய்வின் முக்கியதுவம் குறித்தும், அரியலூர் விதைச்சான்று அலுவலர் என். பாஸ்கர் சான்று விதைகள் உற்பத்தி செய்தல் மற்றும் விதைச்சான்று நடைமுறைகள் குறித்தும், அரியலூர் விதை ஆய்வாளர் கோ. காசிநாதன் விதை விற்பனை நிலையங்கள் கடைபிடிக்க வேண்டிய விற்பனை நடைமுறைகள் மற்றும் பதிவேடுகள் பராமரித்தல் குறித்தும், பெரம்பலூர் விதை ஆய்வாளர் அ. சண்முகசுந்தரம் விதைச் சட்ட அமலாக்கம் மற்றும் விதைச்சட்ட விதிகளை மீறுபவர்கள் மீது எடுக்கப்படும் தண்டனை விவரங்கள் குறித்தும் பேசினர்.

தொடர்ந்து, விதை விற்பனை நிலையங்கள் உரிமம் பெறுவது, புதுப்பித்தல், விதை இருப்புப் பலகை, இருப்புப் பதிவேடு பராமரித்தல், விவசாயிகளுக்கு விற்பனை ரசீது வழங்குவது உள்ளிட்ட நடைமுறைகள்

குறித்தும் பயிற்சி அளிக்கப்பட்டது. இதில், 100-க்கும் அதிகமான தனியார் விதை விற்பனையாளர்கள் பங்கேற்றனர்.

**சேர்வலாறு அணை நீர்மட்டம் 2 அடி உயர்வு**

திருநெல்வேலி மாவட்டத்தில் நீர்பிடிப்பு பகுதியில் பெய்துவரும் மிதமான மழையால் சேர்வலாறு அணை நீர்மட்டம் 2 அடி உயர்ந்து புதன்கிழமை 85.33 அடியாக இருந்தது. மேற்குத் தொடர்ச்சி மலையில் அணைகளின் நீர்பிடிப்பு பகுதியில் மிதமான மழை பெய்து வருகிறது. புதன்கிழமை காலை நிலவரப்படி பதிவான மழையளவு (மில்லி மீட்டரில்):

பாபநாசம் அணை - 1, மணிமுத்தாறு அணை - 1.2, ராமநதி அணை - 2, குண்டாறு அணை - 5.3, அடவிநயினார் அணை - 4, கன்னடியன் அணைக்கட்டு - 1, திருநெல்வேலி - 1, சங்கரன்கோவில் - 2, ஆய்க்குடி - 5.2. பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 943.15 கனஅடி நீர்வரத்து இருந்தது. அணையிலிருந்து 1056 கனஅடி தண்ணீர் திறந்துவிடப்பட்டது. நீர்மட்டம் 75.55 அடியாக இருந்தது. சேர்வலாறு அணை நீர்மட்டம் 2 அடி உயர்ந்து 85.33 அடியாகவும், மணிமுத்தாறு அணை நீர்மட்டம் 78.80 அடியாகவும் இருந்தது. மணிமுத்தாறு அணைக்கு விநாடிக்கு 29 கனஅடி நீர்வரத்து இருந்தது. அணையிலிருந்து பெருங்கால் பாசனத்துக்கு 75 கனஅடியும், தாமிரவருணி ஆற்றில் 300 கனஅடியும் தண்ணீர் திறக்கப்பட்டது.

கடனாநதி அணை நீர்மட்டம் 55.80 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 123.82 கனஅடி நீர்வரத்து இருந்தது. அணையிலிருந்து 110 கனஅடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. பிற அணைகள் நீர்மட்டம்: ராமநதி அணை - 62 அடி, கருப்பாநதி அணை - 68.08 அடி, குண்டாறு அணை - 36.10 அடி, அடவிநயினார் அணை - 81 அடி, வடக்குப்

பச்சையாறு அணை - 29.50 அடி, நம்பியாறு அணை - 12.14 அடி, கொடுமுடியாறு அணை - 50 அடி.

சாகுபடி பணி தீவிரம்: கார் பருவ சாகுபடிக்கு அணைகளிலிருந்து தண்ணீர் திறக்கப்பட்டதை அடுத்து திருநெல்வேலி மாவட்டத்தில் நடவு உள்ளிட்ட விவசாயப் பணிகள் தீவிரமடைந்துள்ளன. அம்பாசமுத்திரம், கல்லிடைக்குறிச்சி, விக்கிரமசிங்கபுரம், முக்கூடல், சுத்தமல்லி, கீழஆம்பூர், ஆழ்வார்குறிச்சி, முன்னீர்பள்ளம் உள்ளிட்ட பகுதிகளில் சாகுபடி பணிகளில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். திருநெல்வேலி கால்வாய், பாளையம் கால்வாய்கள் பாசனம் பெறும் நிலங்களுக்கு தாமதமாக தண்ணீர் திறக்கப்பட்டதால், பாசனப் பணிகளும் தாமதமாக தொடங்கப் பட்டதாக விவசாயிகள் தெரிவித்தனர்

**தானே மறுபயிர் சாகுபடி திட்டம்: தென்னைக்கு இலவச உரம்**

தானே மறுபயிர் சாகுபடி திட்டத்தின் கீழ் தென்னைக்கு இலவச உரம் வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடலூர் வட்டாரத்தில் தானே புயலால் பாதிக்கப்பட்ட தென்னை விவசாயிகளுக்கு, தானே மறுபயிர் சாகுபடி சிறப்பு தொகுப்புத் திட்டத்தின் கீழ் விலையில்லா தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டன. இந்த தென்னங்கன்றுகளுக்கு 4ஆம் ஆண்டு பராமரிப்பிற்காக கன்று ஒன்றுக்கு 1.3 கிலோ யூரியா, தலா 2 கிலோ சூப்பர்பாஸ்பேட், பொட்டாஷ், 1 கிலோ தென்னை நுண்ணூட்டம், தலா 1 பாக்கெட் அசோஸ்பைரில்லம், பாஸ்போ பாக்டீரியா வழங்கப்படுகிறது. இதற்கான தொடக்க விழா சேடப்பாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. வேளாண்மை துணை இயக்குநர் (மாநில திட்டம்) க.இளங்கோ இத்திட்டத்தை தொடங்கி வைத்தார். அப்போது, தென்னங்கன்றுகளுக்கு உரம் வைக்க இது சிறந்த தருணம்

என்பதால் அனைத்து விவசாயிகளும் தவறாமல் உரங்களைப் பெற்று கன்றுகளுக்கு வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இதற்காக வில்வராயநத்தம், வசந்தராயன்பாளையம், திருமாணிக்குழி, வரக்கால்பட்டு, மருதாடு, கரைமேடு, வடபுரம்கீழ்பாதி, பெரியகாட்டுப்பாளையம் ஆகிய கூட்டுறவு வங்கிகளில் தேவையான உரம் இருப்பில் வைக்கப்பட்டுள்ளது. அந்தந்த பகுதி விவசாயிகள் தங்கள் தொகுதி உதவி வேளாண்மை அலுவலர்களைத் தொடர்புகொண்டு உரிய மானிய படிவம் பெற்று உரங்களை வாங்கிக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**செஞ்சி பகுதியில் பலத்த மழை**

செஞ்சி மற்றும் அதன் சுற்று வட்டாரங்களில் செவ்வாய்க்கிழமை இரவு பலத்த மழை பெய்தது. இதனால் இப்பகுதி மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

செஞ்சி மற்றும் அதன் சுற்று வட்டாரங்களில் மழையின்றி கால்நடைகளுக்கு மேய்ச்சல் பகுதி வறண்டு காணப்பட்டது. பயிர்கள் தண்ணீர் இன்றி வாடியது. நிலத்தடி நீர் அடியோடு பாதிக்கப்பட்டு தண்ணீருக்காக மக்கள் திண்டாடி வரும் நிலையில் இருந்து வந்தனர். இந்நிலையில் செவ்வாய்க்கிழமை இரவு சுமார் அரை மணி நேரம் பலத்த மழை பெய்தது. இதனால் தெருக்களில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. புதன்கிழமை மாலையும் பலத்த காற்றுடன் மழை பெய்யும் என நினைத்த விவசாயிகளுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. வெறும் காற்றுடன் மழை பெய்யாமல் ஏமாற்றியது. தொடர்ந்து ஒரு வாரம் அல்லது நான்கு நாள்கள் பலத்த மழை பெய்தால் மட்டுமே செஞ்சி பகுதியில் நிலத்தடி நீர் உயரும் என சமூக ஆர்வலர்கள் தெரிவித்தனர்.

**காரைக்கால் வேளாண் பல்கலை.யில் முதுநிலை படிப்பு சேர்க்கை தொடக்கம்**

காரைக்கால் பண்டித ஜவாஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் முதுநிலை பட்டப்படிப்புக்கு மாணவர் சேர்க்கை தொடங்கியுள்ளது.

இதுகுறித்து கல்லூரி நிர்வாகம் புதன்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு:

புதுவை பல்கலைக்கழக அங்கீகாரம் பெற்ற காரைக்கால் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 2015-16-ம் ஆண்டுக்கான முதுநிலை விவசாயம், தோட்டக்கலை பட்டப்படிப்பு விண்ணப்பங்கள் வழங்கப்பட்டு வருகிறது.

இக்கல்லூரியில் வேளாண் பொருளாதாரம், வேளாண் பூச்சியியல், உழவியல், பயிர் இனப் பெருக்கம் மற்றும் மரபியல், மண் மற்றும் வேளாண் வேதியியல், தோட்டக்கலை ஆகிய ஆறு துறைகளில் பட்ட மேற்படிப்பு பயிலலாம்.

விண்ணப்பங்களை கல்லூரி இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்த விண்ணப்பங்களை கல்லூரியில் சமர்ப்பிக்க 10.8.2015 கடைசி தேதியாகும். விவரங்களுக்கு இணையதளத்தை காணலாம்.

**கால்நடைகளை வளர்க்க உரிமம் பெற அறிவுறுத்தல்**

கால்நடைகள் வளர்ப்பதற்கு நகராட்சியின் உரிமம் பெறவேண்டும் என உழவர்கரை நகராட்சி ஆணையர் எம்.எஸ்.ரமேஷ் அறிவுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

புதுச்சேரி நகராட்சிகள் சட்டம் 1973 பிரிவு 355-ன் கீழ் கால்நடைகளை வளர்ப்பதற்கு உரிமம் பெறுதல் வேண்டும். உரிமமின்றி கால்நடைகளை வளர்ப்பது சட்டப்படி தண்டனைக்குரிய செயலாகும்.

எனினும், உழவர்கரை நகராட்சி எல்லைக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் கால்நடைகளை நகராட்சியின் உரிமம் இல்லாமல், சாலைகளில் திரிந்தவண்ணமும் சுகாதாரமற்ற முறையிலும் வளர்க்கப்படுவதால் அக்கம் பக்கத்தில் வசிப்போருக்கு சுகாதாரக்கேடு ஏற்படுவதாக நகராட்சிக்கு புகார்கள் வந்த வண்ணம் உள்ளன. அவ்வாறு கால்நடைகளை சுகாதாரமற்ற முறையில் வளர்ப்பது குற்றவியல் சட்டத்தின்கீழ் தண்டனைக்குரிய செயலாகும்.

ஆதலால், கால்நடை வளர்ப்போர் இச்செய்தி வெளியிடப்பட்ட 15 தினங்களுக்குள், உழவர்கரை நகராட்சியின் உரிமத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். தவறுவோர் மீது குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்படும் என அதில் தெரிவித்துள்ளார்.

**விவசாயிகளிடம் எம்எல்ஏக்கள் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்**

கர்நாடகத்தில் தொடரும் விவசாயிகளின் தற்கொலையைத் தடுக்க அமைச்சர்கள், எம்எல்ஏக்கள் தங்கள் தொகுதிகளில் உள்ள விவசாயிகள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்று, அந்த மாநில முதல்வர் சித்தராமையா கேட்டுக் கொண்டார். பெங்களூரு விதானசௌதா மாநாட்டு அரங்கில் புதன்கிழமை காங்கிரஸ் சட்டப்பேரவை உறுப்பினர்களுடன் சித்தராமையா தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில், மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.பரமேஸ்வர் உள்பட அமைச்சர்கள் பலரும் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கலந்து கொண்ட முதல்வர் பேசியது: கர்நாடகத்தில் கடன் உள்ளிட்ட பிரச்னைகளால் விவசாயிகள் தொடர்ந்து தற்கொலை செய்து கொள்வது அதிகரித்துள்ளது. இதைத் தடுக்க வேண்டியது அரசின் கடமை. எனவே, சட்டப்பேரவைக் கூட்டத்தொடர்

நிறைவு பெற்றவுடன் அமைச்சர்கள், எம்எல்ஏக்கள் தங்களது தொகுதிகளுக்கு சென்று, அவர்களின் பிரச்னைகளை கண்டறிந்து அதற்குண்டான தீர்வுக்கு வழிவகுக்க வேண்டும்.

மேலும், அவர்கள் தற்கொலை செய்து கொள்ளாத வகையில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். விவசாயிகளுக்காக அரசு அமல்படுத்தியுள்ள பல்வேறு திட்டங்கள் குறித்து அவர்களுக்கு விளக்க வேண்டும். விவசாயிகள் மட்டுமன்றி பிரச்னைகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூற வேண்டியது அரசின் கடமை. வறட்சிப் பகுதிகளில் குடிநீர் பிரச்னை ஏற்படாத வகையில் சம்பந்தப்பட்ட தொகுதி மக்கள் பிரதிநிதிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

பின்னர், இதுகுறித்து மாநில அரசின் தில்லி பிரதிநிதி சி.எஸ்.நாடகௌடா செய்தியாளர்களிடம் கூறியது: சட்டப்பேரவைக் கூட்டத்தொடர் முடிந்த உடன் எம்எல்ஏக்கள் தங்களது தொகுதிகளுக்கு சென்று அங்குள்ள பிரச்னைகளை தீர்க்க வேண்டும். லோக் ஆயுக்த சட்ட மசோதாவில் திருத்தம் செய்ய முடிவு செய்யப்பட்டுளது என முதல்வர் தெரிவித்தார். மாநிலத்தில் காங்கிரஸ் கட்சியில் உறுப்பினர்களை சேர்க்கும் பணியில் அமைச்சர்கள், எம்எல்ஏக்கள் ஆர்வமாக இல்லை. எனவே, இதில் ஆர்வம் காட்டி அதிக அளவில் உறுப்பினர்களை கட்சியில் சேர்க்க வேண்டும் என்று மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.பரமேஸ்வர் தெரிவித்தார். அமைச்சரவையில் இடம்பெற அனைவருக்கும் விருப்பம் உள்ளதால், அமைச்சரவை விரிவாக்கம் குறித்து முதல்வர் சித்தராமையா இறுதி முடிவு எடுப்பார். காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தி தமிழகத்தில் சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு, கர்நாடகத்துக்கு வர உள்ளார் என்றார்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**கேரளாவிற்கு காய்கறி அனுப்ப சான்று 'ரெடி'**

தேனி: கேரளாவிற்கு காய்கறி கொண்டு செல்ல தமிழ்நாடு உணவு பாதுகாப்பு பதிவு சான்று போதுமானது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.தமிழகத்தில் விளையும் காய்கறிகளில் அனுமதிக்கப்பட்ட அளவை விட பூச்சிக்கொல்லி மருந்து பாதிப்பு அதிகம் இருப்பதாக கேரளா புகார் கூறியது. ஜூலை 26 முதல் உணவு பாதுகாப்பு தரச்சான்றிதழ் பெற்றால் மட்டுமே கேரளாவிற்குள் வாகனங்கள் அனுமதிக்கப்படும் என கெடுபிடி உள்ளது. தேனி மாவட்டத்தில் விளையும் காய்கறிகள் குமுளி, போடி மெட்டு வழியாக தினமும் 100 டன் காய்கறிகள் கேரளாவிற்கு கொண்டு செல்லப்படுகிறது.வேளாண் அதிகாரி ஒருவர் கூறியதாவது: காய்கறியில் நச்சு தன்மை பிரச்னை எழுந்த போது கோவை வேளாண் பல்கலை அதிகாரிகள் காய்கறிகளில் மாதிரி சேகரித்து ஆய்வுக்கு உட்படுத்தினர். இதில் பாதிப்பு ஏற்படும் அளவிற்கு நச்சு தன்மை இல்லை என முடிவு வெளியிட்டனர். அதன்பின் கேரளா இது குறித்து எவ்வித சந்தேகமும் கிளப்பவில்லை.உணவு பாதுகாப்பு சட்டத்தில் ஒரு மாநிலத்தில் இருந்து மற்றொரு மாநிலத்திற்கு உணவு பொருட்கள் கொண்டு செல்லப்படும் போது, அதில் ஏதாவது பாதிப்பு ஏற்பட்டால் குறிப்பிட்ட உணவு, காய்கறி யாரால், எங்கிருந்து அனுப்பட்டது என்ற விபரங்களை தெரிந்து கொள்வது அவசியம்.

அதற்காக தமிழ்நாடு உணவு பாதுகாப்பு, மருந்து நிர்வாக துறை வழங்கும் பதிவு சான்று, லைசென்ஸ் விபரங்களை கேட்கின்றனர்.ஆண்டுக்கு ரூ.12

லட்சத்திற்குள் வணிகம் செய்தால், ரூ.100ம் பதிவு சான்று பெற்று கொள்ளவேண்டும். ரூ.12 லட்சத்திற்கு மேல் வணிகம் செய்வோர் ஆண்டுக்கு ரூ.2 ஆயிரம் செலுத்தி லைசென்ஸ் பெற்று கொள்ளலாம். லைசென்ஸ் 5 ஆண்டுகள் வரை செல்லத்தக்க சான்று வழங்கப்படும். அந்தந்த பகுதி உணவு பாதுகாப்பு அலுவலர்களை தொடர்பு கொண்டு ஆன்-லைனில் பதிவு செய்து சான்று பெறலாம், என்றார்.

**திறப்பு இலக்கை நெருங்கிய மேட்டூர் அணை அதிகாரிகள், விவசாயிகள் மகிழ்ச்சி**



பாசனத்திற்கு நீர் திறக்கும் இலக்கை மேட்டூர் அணை நெருங்கியுள்ளதால், விவசாயிகள், பொதுப்பணித் துறையினர் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.தஞ்சை, திருவாரூர், நாகை உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களின் குறுவை பாசனத்திற்காக, ஆண்டுதோறும், ஜூன், 6ம் தேதி மேட்டூர் அணையை திறக்க வேண்டும்.தண்ணீர் குறைவாக இருப்பதால், இந்தாண்டு அணை திறக்கப்படவில்லை. டெல்டா மாவட்டங்களில் நிலத்தடி நீராதாரங்களை பயன்படுத்தி, 2.5 லட்சம் ஏக்கரில் குறுவை சாகுபடி நடந்து வருகிறது. தென்மேற்கு பருவமழை காரணமாக, கபினி, கே.ஆர்.எஸ்., அணைகளில் இருந்து உபரிநீரை, கடந்த மாதம் கர்நாடகா திறந்தது. இதனால், மேட்டூர் அணைக்கு

நீர்வரத்து அதிகரித்து, நீர்மட்டம் மெல்ல உயரத் துவங்கியது. காவிரி நடுவர் மன்ற இறுதி தீர்ப்பின்படி, ஜூன் மாதம், 10 டி.எம்.சி., தண்ணீர், தமிழகத்திற்கு கிடைத்திருக்க வேண்டும்; ஆனால் கூடுதலாக, 2.5 டி.எம்.சி.,யை கர்நாடகா வழங்கியது. ஜூலை மாதத்தில், 34 டி.எம்.சி., தண்ணீரை வழங்க வேண்டும்; ஆனால், கடந்த, 20 நாட்களாக, போதுமான அளவு நீரை கர்நாடகா திறக்கவில்லை. தற்போது வரை, 18 டி.எம்.சி., மட்டுமே கிடைத்துள்ளது. ஜூலை மாத ஒதுக்கீட்டின், முழு அளவு தண்ணீரும் கிடைக்குமா என்ற கேள்வி எழுந்தது. இந்நிலையில், மீண்டும் காவிரியில் கூடுதல் நீரை, திறக்கும் நடவடிக்கையை கர்நாடகா துவங்கியுள்ளது. நேற்று காலை நிலவரப்படி, விநாடிக்கு, 25,103 கனஅடி தண்ணீர், மேட்டூர் அணைக்கு வந்தது. தற்போது, அணையின் நீர் இருப்பு, 52.5 டி.எம்.சி.,யாக, நேற்று அதிகரித்தது.அணையில், 90 அடிக்கு மேல் தண்ணீர் இருந்தால் மட்டுமே, குறுவை, சம்பா சாகுபடிக்கு தண்ணீர் திறக்க முடியும். தற்போது, 89.9 அடியை எட்டியுள்ளது. ஓரிரு நாளில், நீர்திறப்பு அளவை, அணை எட்டிவிடும் என்பதால், பொதுப்பணித் துறை அதிகாரிகள், விவசாயிகளும் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர். - நமது நிருபர் –

**பப்பாளி சாகுபடியில் விவசாயி சாதனை**



சேலம்: சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயி, 30 சென்ட் நிலத்தில், பப்பாளி சாகுபடி செய்து, ஆண்டுக்கு, ஒரு லட்சம் ரூபாய் லாபம் ஈட்டுகிறார்.

30 சென்ட்டில்...:சேலம் மாவட்டம், இளம்பிள்ளையைச் சேர்ந்தவர் ராஜேந்திரன். இவரின் மனைவி சித்ரா. இவர்களுக்கு சொந்தமாக, இளம்பிள்ளை சாலையில், விவசாய நிலம் உள்ளது. நிலத்தின் ஒரு பகுதி யில், 30 சென்ட்டில், பப்பாளி பயிரிட்டு, பழங் களை நேரடியாக விற்பனை செய்து வருகின்றனர்.பப்பாளி மரங்களுக்கு, செயற்கை உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்து களை முற்றிலும் தவிர்த்து, இயற்கை உரங்களை கொண்டு வளர்க்கின்றனர். தற்போது, அறுவடைக்கு தயாரான நிலையில், பழங்களை, மார்க்கெட்டுக்கு அனுப்பாமல், விவசாய நிலம் அருகில், கடை விரித்து, வியாபாரம் செய்து வருகின்றனர். வெளி மார்க்கெட்டில், பப்பாளி, கிலோ, 25 ரூபாய் முதல் 30 ரூபாய் வரை விற்கும் நிலையில், இங்கு, 20 ரூபாய்க்கு விற்கின்றனர்.

**விவசாய தம்பதி ராஜேந் திரன், சித்ரா கூறியதாவது:**தோட்டக்கலைத் துறையால் சிபாரிசு செய்யப்பட்ட, 'கிராஸ்' ரக பப்பாளியை, நாங்கள் சாகுபடி செய்துள்ளோம். இந்த பழம், நாட்டு பழத்தின் ருசியை தாண்டி விடுவதோடு, சத்து மிக்கதாகவும் உள்ளதால், அனைவரும் விரும்பி வாங்குகின்றனர்.இந்த பப்பாளி மரங்கள், இரண்டு ஆண்டு வரை பலன் கொடுக்கிறது. மாதத்துக்கு, இரண்டு முறை தண்ணீர் பாய்ச்சினால் போதும் என்பதோடு, பராமரிப்பு செலவுகளும் குறைவு.ஆறு மாதத்துக்கு ஒரு அறுவடை என்ற வகையில், ஆண்டுக்கு இரண்டு அறுவடையில், 1 லட்சம் ரூபாய் வரை லாபம் கிடைக்கும்.

### நல்ல பலன்:

பப்பாளியை பழுக்க வைக்க, கல், நைட்ரஜன் திரவம் உள்ளிட்டவற்றை பயன்படுத்துவது இல்லை. மரத்தில் பழுத்த பழத்தை பறித்து, அப்படியே கொடுக்கிறோம்.பழத்தை வாங்குபவர் கண் முன்னே, மரத்தில் இருந்து பறித்துக் கொடுப்பதால், திருப்தியுடன் வாங்குகின்றனர். பிற விவசாய பயிர்களை விட, பப்பாளி நல்ல பலனை கொடுக்கிறது.இவ்வாறு அவர்கள் கூறினர்.

### விவசாயிகள் குறைதீர் கூட்டம்

கோவை : விவசாயிகள் முறையீட்டுக்குழுக் கூட்டம், வரும், 31ம் தேதி, காலை 10:00 மணிக்கு, கலெக்டர் அலுவலகத்தில் நடக்கிறது. கலெக்டர் தலைமையில் நடக்கும் இக்கூட்டத்தில் விவசாயிகள் பங்கேற்று, வேளாண் பிரச்னைகள் தொடர்பான மனுக்களை அளிக்கலாம் என, அறிவிக்கப்பட்டுள்ளது.

### விவசாயிகளுக்கான விழிப்புணர்வு கூட்டம்

உத்திரமேரூர்:ஒழுங்குமுறை விற்பனைக்கூட திட்டங்கள் குறித்து விவசாயிகளுக்கான விழிப்புணர்வு கூட்டம், உத்திரமேரூர், ஒழுங்குமுறை

விற்பனை கூடத்தில் நேற்று நடந்தது. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக துறை சார்பில் நடந்த இக்கூட்டத்தில், உத்திரமேரூர் மற்றும் அதை சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த, 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். இதில், மாவட்ட வேளாண் துறை துணை இயக்குனர் (வேளாண் வணிகம்) சந்துரு மற்றும் துறை அதிகாரிகள் கலந்து கொண்டு ஒழுங்குமுறை விற்பனை கூட திட்டத்தின் செயல்பாடுகள் மற்றும் அதனால் விவசாயிகள் அடையும் பயன்கள் குறித்து விளக்கி பேசினர். கூட்டத்தில், உழவர் நல திட்டத்தின்கீழ் இலவச காப்பீட்டு திட்டங்கள் மூலம் பயன்பெறும் வழி முறைகள் குறித்து, விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

**பாரம்பரிய உணவு திருவிழா**

திருத்தணி:ஊராட்சியில் நடந்த பாரம்பரிய உணவு திருவிழாவில், சிறுதானியங்கள் மூலம் க0 வகையான உணவு வகைகள் தயாரித்து, கிராமவாசிகளுக்கு வழங்கி, அதன் நன்மைகள் குறித்து விளக்கினர்.கிராம பெண்கள் விடுதலை இயக்கம் சார்பில், திருவாலங்காடு ஒன்றியம், நெடும்பரம் அருந்ததி காலனியில், பாரம்பரிய உணவு திருவிழா நேற்று நடந்தது. கிராம பெண்கள் விடுதலை இயக்க தலைவி சந்திரம்மா தலைமை வகித்தார். உணவு திருவிழா ஒருங்கிணைப்பாளர் உமா வரவேற்றார். இதில், தக்கோலம் இயற்கை விவசாயி ஆனந்த், கனகம்மாசத்திரம் அரசினர் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் ஆனந்த் ஆகியோர், சிறுதானியங்களால் செய்யப்படும் உணவுகளை சாப்பிட்டால் நோய் வராமல், தடுக்கலாம், ஆரோக்கியத்துடன் வாழ்லாம் என்பதை விளக்கினர். சிறுதானியங்களில் செய்யப்பட்ட, தினை லட்டு, தினை பாயசம், கொள்ளு வடை, கேழ்வரகு அடை, எள்ளு சிமிலி, முருங்கை கீரை சூப், புரூட் சாலட், கேழ்வரகு கொழுக்கட்டை, பச்சை

பயறு சுண்டல் மற்றும் சிறுபயறு பாயசம் போன்ற க0 வகையான உணவுகள், காலனிவாசிகள் மத்தியில் தயாரிக்கப்பட்டது.

**கால்நடை மருத்துவ முகாம்**

விக்கிரவாண்டி:விக்கிரவாண்டி ஒன்றியம், வடகுச்சிபாளையத்தில் இலவச கால்நடை மருத்துவ முகாம் நடந்தது.வடகுச்சிபாளையத்தில் நடந்த இலவச கால்நடை மருத்துவ முகாமிற்கு மண்டல இணை இயக்குனர் டாக்டர் தங்கராஜ் தலைமை தாங்கினார் . மாவட்ட சேர்மன் அலமேலு வேலு முன்னிலை வகித்தார். உதவி இயக்குனர் டாக்டர் குருவையா வரவேற்றார்.கலெக்டர் லட்சுமி கால்நடை மருத்துவ முகாமை துவக்கி வைத்தார். நிலவள வங்கித் தலைவர் சிந்தாமணி வேலு, கால்நடை உதவி மருத்துவர்கள் பிரபாகரமூர்த்தி, சதானந்தம், பாலாஜி, யுவராஜ், ஊராட்சி தலைவர் கமலி அய்யப்பன், துணைத் தலைவர் தென்னரசு, வெங்கடேசன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.வடகுச்சிபாளையம் மற்றும் சுற்றுப்புற கிராமங்களை சேர்ந்த ஆயிரத்து 100 கால்நடைகளுக்கு தடுப்பூசி, ஆண்மை நீக்கம், குடற்புழுநீக்கம் உள்ளிட்ட சிகிச்சைகள் அளிக்கப்பட்டது.

**இரு ஆண்டுகளுக்கு பிறகு கூட்டம் திண்டிவனம் விவசாயிகள் மகிழ்ச்சி**

திண்டிவனம்:கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு பிறகு திண்டிவனம் வட்டத்தில் குறைகேட்பு கூட்டம் நடத்தப்பட்டதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.திண்டிவனம், மரக்காணம், மயிலம், செஞ்சி உள்ளிட்ட பகுதிகளில் ஏராளமான விவசாய நிலங்கள் அமைந்துள்ளது. நீண்ட காலமாக, திண்டிவனம் வட்டத்தில் விவசாயிகள் குறைகேட்பு கூட்டம் நடத்தப்படவில்லை. இந்நிலையில் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு பிறகு, நேற்று திண்டிவனம் சப்-கலெக்டர் ஸ்ரீதர் தலைமையில் விவசாயிகள் குறைகேட்பு கூட்டம் நடந்தது.

இதில், விவசாயிகள் தங்களின் நீண்ட நாட்கள் சொல்ல முடியாமல் வைத்திருந்த குறைகளை வெளிச்சம் போட்டு காட்டினர். குறிப்பாக உரத்தட்டுபாடு பிரச்னையை அதிகாரிகளிடம் அனைத்து விவசாயிகளும் தெரிவித்தனர். கூட்டத்தில் பங்கேற்ற விவசாயிகள் கூறுகையில்," உரம், புறம் போக்கு நிலம் ஆக்கிரமிப்பு உள்ளிட்ட பிரச்னைகள் இருந்தது. கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இருந்த சப்-கலெக்டர் ரோகிணி, ஒவ்வொரு மாதமும், விவசாயிகளிடம் குறைகளை கேட்டு, தீர்க்க நடவடிக்கை மேற்கொண்டார்.அவர் மாறுதலில் சென்ற பிறகு, யாரும் கூட்டம் நடத்தவில்லை.இரண்டு ஆண்டுகளுக்கு பிறகு நேற்று குறைகேட்பு கூட்டம் நடத்தப்பட்டது மகிழ்ச்சி அளிக்கிறது. இதே போன்று ஒவ்வொரு மாதமும், குறைகேட்பு கூட்டம் நடத்தி எங்களின் பிரச்னைகளை தீர்த்து வைக்க வேண்டும்' என்று தெரிவித்தனர்.

**கள்ளக்குறிச்சி பகுதி விவசாயிகள் ஊடுபயிர் சாகுபடியில் ஆர்வம்**

கள்ளக்குறிச்சி:கள்ளக்குறிச்சி பகுதியில் ஊடு பயிர் சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.கள்ளக்குறிச்சி பகுதியில் 6 மாத பயிரான மஞ்சள் சாகுபடி செய்த விவசாயிகள், அதனுடன் 3 மாத பயிரான சிறிய ரக வெங்காயத்தையும் சாகுபடி செய்து வருகின்றனர்.குறைந்தளவு தண்ணீர் தேவை மற்றும் மாதத்திற்கு ஒரு பராமரிப்பு, அதிக வருவாய் கொண்ட 6 மாத பயிரான மஞ்சளை அதிகளவு விவசாயிகள் பயிரிட்டுள்ளனர். அதனுடன் சேர்த்து அதிக லாபம் தரக்கூடிய சிறிய ரக வெங்காயத்தையும், விவசாயிகள் பயிரிட்டு வருகின்றனர்.கள்ளக்குறிச்சி அடுத்த காரனூர், குதிரைச்சந்தல், தச்சூர், புக்கிரவாரி பகுதி விவசாயிகள் மஞ்சள் பயிருடன், வெங்காயத்தை ஊடுபயிராக சாகுபடி செய்துள்ளனர். வெங்காயத்திற்கென தனியாக அல்லாமல் மஞ்சளுக்கு இறைக்கும் நீரே இதற்கும் போதுமானதாக உள்ளது. குறைந்த தண்ணீர் செலவில், அதிக லாபம் பெறும் நோக்கில் விவசாயிகள் ஊடுபயிர் சாகுபடியில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

**மீன் வளர்ப்பில் வருவாய் அதிகரிப்பு பண்ணை குட்டை திட்டத்தில் சாதனை**

பள்ளிபாளையம்:மீன் வளர்ப்பில், கணிசமான வருவாய் ஈட்டி வரும் விவசாயி, தொடர்ந்து அதில் ஆர்வம் காட்டி வருவதால், வியாபாரிகளும், பொதுமக்களும் அதிக அளவில் மீன்களை வாங்கி சுவைக்கின்றனர்.பள்ளிபாளையம் வட்டாரத்தில், கடந்தாண்டு, வேளாண் துறை சார்பில், மழைநீர் சேகரிக்க, குட்டை அமைக்க (பண்ணை குட்டை), 10 விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டனர். தேர்வு செய்யபட்டவர்களுக்கு, மாவட்ட ஊரக வளர்ச்சி துறை சார்பில், மழைநீர் சேகரிப்பு குட்டை அமைக்கப்பட்டது.மழைநீர் சேகரிப்பு குட்டையில், மழை காலத்தில் பெய்யக்கூடிய தண்ணீரை சேமித்து, விவசாயம் செய்யலாம். அதன் மூலம், நிலத்தடி நீர் உயரும். இத்திட்டம் வறட்சி காலத்தில் விவசாயிகளுக்கு பயன் உள்ளதாக இருக்கும்.பள்ளிபாளையம் அடுத்த, பாப்பம்பாளையம் கோம்புமேடு பகுதியை சேர்ந்த விவசாயி பெரியசாமி, 50, என்பவர், இந்த மழைநீர் சேகரிப்பு குட்டையை பயன்படுத்தி மீன் வளர்ப்பில் ஈடுபட்டு, கூடுதல் வருவாய் ஈட்டி வருகிறார்.

இதுகுறித்து, விவசாயி பெரியசாமி கூறியதாவது:மழைநீர் சேகரிப்பு குட்டை அமைக்க தேர்வு செய்யப்பட்ட நான், ஊரக வளர்ச்சி துறை மூலம் குட்டை அமைத்து, மழைநீர் சேகரித்து விவசாயம் செய்தேன். மேலும், குட்டையை பயன்படுத்தி, கூடுதல் வருவாய் ஈட்ட, மீன் வளர்க்க முடிவு செய்தேன்.அது தொடர்பான ஆலோசனைக்கு, மேட்டூர் சென்று மீன் வளர்ப்பு துறை அதிகாரியிடம் விவரங்களை கேட்டறிந்தேன். மேலும், தலா, 25 காசு வீதம், 1,000 மீன் குஞ்சுகளை வாங்கி வந்து, குட்டையில் விட்டேன். மீன்களுக்கு தேவையான புண்ணாக்கு, தவிடு,

சாணம், காளிஃபிளவர் மற்றும் முட்டைகோஸ் இலை ஆகியவற்றை உணவாக அளிக்கப்பட்டது.

மீன் குஞ்சு குட்டையில் விட்டு ஓராண்டு முடிந்துள்ளது. ஒவ்வொரு மீன் குஞ்சுகளும் வளர்ந்து, மூன்று கிலோ முதல், ஐந்து கிலோ வரை வளர்ந்துள்ளது. தற்போது மீன்கள் விற்பனைக்கு வந்துள்ளது. ஒரு கிலோ, 120 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதுவரை, 500 கிலோ வரை மீன்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

மீன்களை வியாபாரிகளும், பொதுமக்களும் ஆர்வமுடன் வாங்கிச் செல்கின்றனர். தற்போது மீன்கள் இனப்பெருக்க காலம் துவங்கி உள்ளதால், மீன் குஞ்சுகள் அதிகளவில் உள்ளது. மீன் வளர்ப்பு மூலம், நிறைவான லாபம் கிடைத்து வருகிறது.இவ்வாறு, அவர் கூறினார்.

**காவிரி ஆற்றில் 22,000 கனஅடி நீர் வரத்து மேட்டூர் அணை நீர்மட்டம் 90 அடியை எட்டியது**

ஒகேனக்கல்:ஒகேனக்கல் காவிரி ஆற்றில், நேற்றைய நிலவரப்படி, 22 ஆயிரம் கன அடிநீர் வந்து கொண்டிருந்தது. மேட்டூர் அணை நீர்மட்டம், நேற்று, 90 அடியை எட்டியது.

கர்நாடக மாநிலம், கபினி, கே.ஆர்.எஸ்., அணைகளின் பாதுகாப்பு கருதி, அம்மாநில அரசு, கடந்த, நான்கு நாட்களுக்கு முன், இரண்டு அணைகளிலும், உபரிநீரை திறந்துவிட்டுள்ளது. நேற்று முன்தினம் காலை, பிலிகுண்டலு காவிரி ஆற்றில், வினாடிக்கு, 24 ஆயிரத்து, 500 கன அடிநீர் வந்தது. இதனால், ஒகேனக்கல் காவிரி ஆற்றில், தண்ணீர் பெருக்கெடுத்து, அருவிகளில் கொட்டியதுடன், அருவிக்கு செல்லும் நடை பாதைக்கு மேலாக தண்ணீர் சென்றது. இதையடுத்து, சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பு கருதி, ஒகேனக்கல் காவிரி ஆறு, மற்றும் அருவியில் குளிக்க, நேற்று இரண்டாவது நாளாக மாவட்ட நிர்வாகம்

தடை விதித்தது. கோத்திக்கல் பாறையில் இருந்து, பரிசல்கள் இயக்க அனுமதிக்கப்பட்டது. இந்நிலையில், நேற்று காலை, 10 மணி நிலவரப்படி, தமிழக எல்லையான, பிலிகுண்டலுக்கு, வினாடிக்கு, 25 ஆயிரம் கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. ஆனால், மதியம், 1 மணி நிலவரப்படி, பிலிகுண்டலுக்கு, வினாடிக்கு, 22 ஆயிரம் கன அடி தண்ணீர் வந்ததால், ஒகேனக்கல் அருவிக்கு செல்லும் நடை பாதைக்கு மேல் சென்ற தண்ணீர், நடைபாதைக்கு கீழாக செல்ல தொடங்கியது. இருந்தும், சுற்றுலா பயணிகளை, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, ஆபத்தான பகுதிகளில் குளிக்க மாவட்ட நிர்வாகம் அனுமதிக்கவில்லை.

90 அடியானது:கடந்த, 20ம் தேதி, 8,721 கனஅடியாக இருந்த மேட்டூர் அணை நீர்வரத்து, நேற்று முன்தினம், 23,500 கனஅடியாகவும், நேற்று, 25,103 கனஅடியாகவும் அதிகரித்தது. கூடுதல் நீர்வரத்து காரணமாக நேற்று முன்தினம், 88.150 அடியாக இருந்த மேட்டூர் அணை நீர்மட்டம் நேற்று, 90 அடியாகவும், 50.563 டி.எம்.சி.,யாக இருந்த நீர் இருப்பு நேற்று, 52.537 டி.எம்.சி.,யாகவும் அதிகரித்தது.

கர்நாடகா அணைகளில் திறக்கப்பட்ட தண்ணீர் தொடர்ச்சியாக வந்து கொண்டிருப்பதால் வரும் நாட்களில் மேட்டூர் அணை நீர்மட்டம் மளமளவென அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**தொடரும் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி**

தர்மபுரி:தர்மபுரி மாவட்டத்தின், பல்வேறு பகுதிகளில், நேற்று முன்தினம் மழை பெய்ததுடன், நேற்றும், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில், மழை பெய்ததால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.தர்மபுரி மாவட்ட மக்களையும், விவசாயிகளையும், தென்மேற்கு பருவமழை ஏமாற்றி வந்தது. இதனால், ஜூன் மற்றும் ஜூலை மாதத்தில், பல நாட்கள் கோடை வெயில் போன்று, 95 டிகிரிக்கு மேல் வெயில் வாட்டி வந்தது. இதனால், பொதுமக்கள் வதியடைந்ததுடன், விவசாயிகள் கடுமையாக

பாதிக்கப்பட்டனர்.குறிப்பாக, ஜூலை மாதத்தில், 20ம் தேதியை கடந்தும், தென்மேற்கு பருவமழை பெய்யாததால், விவசாயிகள் ஆடி பட்டத்தில், சாகுபடி செய்ய முடியுமா, என, அச்சம் அடைந்தனர். இந்நிலையில், விவசாயிகளின், வாட்டத்தை போக்கும் வகையில், நேற்று முன்தினம், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில், மழை பெய்த போதும், குறிப்பிட தக்க வகையில், தர்மபுரி, கலெக்டர் அலுவலகம் பகுதி, பாலக்கோடு ஆகிய பகுதிகளில் மழை பெய்தது. இதில் அதிகபட்சமாக, தர்மபுரியில், 12 மில்லிமீட்டரும், கலெக்டர் அலுவலகத்தில், 8 மி.மீ., பாலக்கோட்டில், 7.40 மி.மீ., மழையளவு பதிவானது. இந்நிலையில், நேற்று காலை முதல், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் வானம், மழை மேகத்துடன் காணப்பட்டதுடன், மதியம், தர்மபுரி உட்பட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் லேசான மழை பெய்தது. மாலை மாவட்டத்தின் பல்வேறு பகுதியில் மழைபெய்த போதும், தர்மபுரியில், அவ்வப்போது, சாரல் மழை மட்டும் பெய்தது. ஆனாலும், இது, நகரில், குளுமையை ஏற்படுத்தியதால், பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மேலும், பருவ மழை தொடர வாய்ப்புள்ளதால், ஆடிபட்ட சாகுபடியை தொடங்கும், பணியில், விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

**உழவு பணியில் விவசாயிகள் 'பிசி'**

கூடலூர் :கூடலூர் பகுதியில் உழவு பணியில் சிறு விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.கூடலூர் பகுதியில் கடந்த மாதம் பெய்த பருவமழையை தொடர்ந்து, அங்குள்ள விவசாய நிலங்கள் ஈரம் கண்டன. நீர்நிலைகளில் வெள்ளம் அதிகரித்தது. இதைத்தொடர்ந்து, இம்மாத முதல் வாரத்தில், விவசாயிகள் விதை நெல்லை விதைத்தனர். தற்போது, அவைகள் முளைத்து நடவுக்கு தயாராகி விட்டன.இந்நிலையில், கூடலூர், பந்தலூர் உட்பட சுற்றுப்புற கிராம பகுதிகளில் உள்ள வயல்களில், நெல் நடவுக்காக, விவசாயிகள் டிராக்டர் மூலம் உழவு பணிகளை

துவங்கியுள்ளனர். சில பகுதிகளில் நடவுக்கான, நாற்றுகளை பறிக்கும் பணியிலும் பெண் தொழிலாளர்கள் ஈடுப்பட்டுள்ளனர். இந்நிலையில், கடந்த இரண்டு வாரமாக இப்பகுதிகளில் பருவமழை குறைந்து பாதிப்பு ஏற்படும் சூழ்நிலை உள்ளது.நெல் விவசாயிகள் கூறுகையில், 'உழவு பணி துவங்கியதை தொடர்ந்து, ஓரிரு நாளில் நெல் நடவு பணிகளையும் துவக்கி விடுவோம். ஆடிமாதத்திலும் மழை குறைந்துள்ளால், பல பகுதிகளில் உழவு மற்றும் நெல் நடவு பணிகள் துவங்க தாமதம் ஏற்பட்டுள்ளது. இதனைப்போக்க வருண பகவான் மனது வைக்க வேண்டும்' என்றனர்.

**நத்தத்தில் கனமழை**

நத்தம்:நத்தம் மற்றும் அதன் சுற்றுப்பகுதிகளில் நேற்று மாலை ஒரு மணி நேரம் கன மழை பெய்தது. நத்தம் பகுதியில் கடந்த சில நாட்களாகவே வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது. நேற்று காலை முதலே வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது.

அவ்வப்போது வெயில் அடித்தது. மாலை 4 மணியளவில் கருமேகம் சூழ்ந்த நிலையில் சாரல் மழை பெய்ய ஆரம்பித்தது. சிறிது நேரத்தில் கன மழையாக மாறியது. நத்தம், சமுத்திராபட்டி, ஏரக்காபட்டி, ஊராளிபட்டி, மெய்யம்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் சுமார் ஒரு மணிநேரம் கன மழை கொட்டியது. சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. இந்த மழையால் இப்பகுதியில் சூடு தணிந்து குளிர்ச்சியான சூழ்நிலை நிலவியது. வெப்பத்தால் அவதியுற்று வந்த இப்பகுதியினர் மகிழ்ச்சியடைந்தனர்.

**இனிக்கும் பெங்களூரு உருளைக் கிழங்கு விற்பனை**

திருப்புவனம்:திருப்புவனம் உள்ளிட்ட வாரச்சந்தைகளில் இனிக்கும் பெங்களூரு உருளைக்கிழங்கு அதிகளவு விற்பனையாகின்றன.

தமிழகத்தில் ஊட்டி, கொடைக்கானல் ஆகிய பகுதிகளில் உருளை கிழங்கு பயிரிடப்படுகின்றன. பயிரிடப்பட்ட 3 மாதங்களில் உருளை கிழங்கு விளைச்சலுக்கு வந்துவிடும், 45 கிலோ விதை பயிரிடப்பட்டால் 600 கிலோ வரை உருளை கிழங்கு கிடைக்கும். ஊட்டி, கொடைக்கானலில் விளையும் உருளை கிழங்கு நல்ல உவர்ப்பு தன்மையுடன் ருசியாக இருக்கும். கொடைக்கானலில் தை , மாசி, பங்குனி மாதங்களில் உருளை கிழங்கு அதிகளவில் விளைவிக்கப்பட்டு மதுரை மார்க்கெட்டிற்கு கொண்டு வரப்படும். கொடைக்கானல் உருளை கிழங்கு கிலோ 25 ரூபாய் முதல் 40 ரூபாய் வரை விற்பனை செய்யப்படும். சமீப காலமாக பெங்களூரூவில் இருந்து அதிகளவு உருளைக் கிழங்கு மதுரை மார்க்கெட்டிற்கு வர தொடங்கியுள்ளன. கிலோ எட்டு ரூபாய் முதல் 10 ரூபாய் வரை விலை குறைத்து விற்பனை செய்யப்படுகிறது.

வியாபாரி முருகன் கூறுகையில், நம் பகுதியில் விளையும் கிழங்கு நல்ல சுவையுடன் இருக்கும். சிப்ஸ், வறுவல் செய்ய அதிகம் பயன்படுத்துவர். பெங்களூரூ கிழங்கு இனிப்பாக இருப்பதால் தற்போது பொது மக்கள் இதனை தவிர்த்து வருகின்றனர். ஆனாலும் கிராமப்புற மக்கள் விலை மலிவு என்பதால் வாங்கி செல்கின்றனர், என்றார்.

## தேவகோட்டையில் 55.2 மி.மீ., மழை

சிவகங்கை:மாவட்டத்தில் நேற்று காலை 8 மணி நிலவரப்படி தேவகோட்டையில் அதிகபட்சமாக 55.2 மி.மீ., மழை பதிவானது.மழை துவங்க உள்ள நிலையில் மழையால் பாதிப்பு ஏற்பட்டால், பொதுமக்கள் இலவச டோல்பிரீ எண் : 1077ல் சிவகங்கை கலெக்டர் அலுவலக, பேரிடர் மேலாண்மை பிரிவுக்கு தகவல் தெரிவிக்கலாம். மழை அளவு: காரைக்குடி - 46 மி.மீ., மானாமதுரை - 7.4, திருப்புவனம் - 16.4,

திருப்புத்தூர் - 40, இளையான்குடி - 8.2, தேவகோட்டை - 55.2, சிவகங்கை - 12.

**சம்பங்கி மலர் சாகுபடியில் பூச்சி நோய்–நூற்புழு மேலாண்மை முறைகள்**



ஈரோடு

சம்பங்கி மலர் வெப்ப மண்டலத்திலும், மிதவெப்ப மண்டல பிரதேசங்களிலும் நன்றாக வளரக்கூடியது. அனைத்து முக்கிய நிகழ்ச்சிகளிலும் நாம் பயன்படுத்தும் பூக்களில் ஒன்றாக உள்ளது. இதில் இருந்து வாசனை எண்ணையும், நறுமணப்பொருளும் தயார் செய்யப்படுகிறது. இந்த சம்பங்கி சாகுபடியில் மகசூல் இழப்பிற்கு காரணமாக விளங்குவது பூச்சிகள், நோய்கள் மற்றும் நூற்புழுக்கள் ஆகும். மேலும் மகசூலை அதிகப்படுத்துவதற்கான தொழில்நுட்பத்தை காணலாம்.

சாகுபடி முறைகள்

நிலத்தை நன்கு உழவு செய்த பிறகு 12½ டன் தொழுஉரத்தை மண்ணில் இட வேண்டும். சம்பங்கி மலர் குமிழம் மூலம் உற்பத்தி செய்யப்படுகிறது. ஒரு ஹெக்டர் நடவுக்கு 9 டன் குமிழங்கள் தேவைப்படுகிறது. குமிழங்களின் விதை உறக்கம் நீக்க 4 சதவீதம் தயோயூரியா கரைசலில் குமிழங்களை ஒரு மணி நேரம் ஊற வைத்து பின்பு நடவு செய்ய வேண்டும்.

நல்ல காற்றோட்டம் உள்ள மண் வகை மற்றும் களிமண் கலந்த வண்டல் மண் வகை பகுதிகளில் சம்பங்கி மலர் நன்றாக வளரும் தன்மை கொண்டது. அமில கார தன்மை 6.5 முதல் 7.5 வரை உள்ள மண்ணில் நன்றாக வளரும். மெக்ஸிகன் சிங்கிள், ப்ரஜ்வார், புனோ சிங்கிள் சுவசினி, வைபவ் ஆகிய ரகங்கள் பயிர் செய்யலாம்.

ஜூன் – ஜூலை மாதங்களில் 25 முதல் 30 கிராம் எடையுள்ள குமிழங்களை 45–க்கு 20 சென்டிமீட்டர் இடைவெளியில் 25 சென்டிமீட்டர் ஆழத்தில் நடவு செய்ய வேண்டும். நடவுக்கு முன் குமிழங்களை 5 கிராம் சைக்லைசல் எனும் பயிர் வளர்ச்சி ஊக்கியை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து மூழ்கச்செய்து நடவு செய்தால் மகசூல் அதிகரிக்கும்.

ஒரு ஹெக்டருக்கு 100 கிலோ தழைச்சத்து, 60 கிலோ மணிச்சத்து உரமாக கொடுக்கப்பட வேண்டும். வாசனை எண்ணெயின் மகசூலை அதிகரிக்க ஒரு ஹெக்டருக்கு 80 கிலோ தழைச்சத்து, 60 கிலோ மணிச்சத்து மற்றும் 40 கிலோ சாம்பல் சத்தும் இட வேண்டும்.

பூச்சி மேலாண்மை

மொட்டு துளைப்பான் பூச்சியானது மெதுவாக பூக்களை தாக்கும். மொட்டுகள் மற்றும் பூக்களை புழுக்கள் துளைத்து சென்று மொட்டுக்களில் உள்ளிருப்பவைகளை உண்ணும். இந்த புழுவை கட்டுப்படுத்த தாக்கப்பட்ட மொட்டுகளை சேகரித்து அழித்துவிட வேண்டும். விளக்கு பொறி வைத்து அந்துப்பூச்சியை அழித்து விடலாம்.

வேப்ப எண்ணெய் 0.5 சதவீதம் தெளித்து இந்த மொட்டு துளைப்பானை கட்டுப்படுத்தலாம்.

சாறு உறிஞ்சும் பூச்சிகளான அசுவினி, இலைப்பேன், தத்துப்பூச்சி, செம்பேன் சிலந்தி ஆகியன சம்பங்கி மொட்டுகளிலும், இலைகளிலும் தாக்குவதால் செடிகள் வாடி இறந்துவிடும். இவைகளை கட்டுப்படுத்த மஞ்சள் ஒட்டுப்பொறியை ஏக்கருக்கு 8 என்ற அளவில் வயலில் வைக்கவும். வேம்பு சோப்பு அல்லது புங்கம் சோப்பை ஏக்கருக்கு 500 கிராம் என்ற விகிதத்தில் தெளித்து கட்டுப்படுத்தலாம். பூச்சிக்கொல்லிகளில் குயினால்பாஸ் ஒரு ஹெக்டருக்கு 2 லிட்டர் என்ற அளவில் தெளித்து கட்டுப்படுத்தலாம்.

சம்பங்கியை தாக்க கூடிய நோய்களில் தண்டு அழுகல் நோயின் அறிகுறிகள் ஏற்படுவதற்கு முன் இலைகள் முழுவதும் புள்ளிகள் தோன்றும். பாதிக்கப்பட்ட இலைகளை சுற்றி குறைவாகவோ அல்லது அதிகமாகவோ பழுப்பு நிற புள்ளிகள் உருவாகின்றன. இந்த நோயை கட்டுப்படுத்த ஒரு ஹெக்டருக்கு 30 கிராம் பிரேஸிக்கால் தெளிக்க வேண்டும்.

<u>நூற்புழு மேலாண்மை முறைகள்</u>

சம்பங்கி மலர்களில் மகசூல் இழப்பிற்கு நூற்புழுவும் ஒரு முக்கிய காரணியாக அமைகிறது. நூற்புழுக்களின் தாக்குதலினால் கணிசமான அளவு இழப்பீடுகளை விவசாயிகள் சந்திக்க நேரிடுகிறது. இந்த தாக்குதலானது வேர்களில் சாறு உறிஞ்சப்படுவதால் பயிர் வளர்ச்சி குன்றி, மலர் மகசூல் குறைகிறது. வயல் முழுவதும் சீராக இல்லாமல் ஆங்காங்கே காணப்படும். நூற்புழுக்களின் நகரும் திறன் குறைவாக உள்ளதால் அதன் பாதிப்புகள் வயலில் ஆங்காங்கே காணப்படுகின்றன. பாதிக்கப்பட்ட செடிகளின் வேர்களில் உருண்டையான முடிச்சுக்கள் காணப்படும்.

இந்த வேர் முடிச்சு நூற்புழுவை கட்டுப்படுத்த சூடோமோனாஸ் ப்ரோசன்ஸ் எனும் நன்மை செய்யும் பூஞ்சையை ஏக்கருக்கு 1 கிலோ

வீதம் 50 கிலோ தொழு உரத்துடன் வயலில் இட வேண்டும். மேலும் வேர் உட்பூசணத்தை ஏக்கருக்கு 25 கிலோ என்ற விகிதத்தில் இட்டு மண் அணைக்க வேண்டும். பின் பெசிளியோமைசிஸ் எனும் உயிர் நூற்புழு கொல்லியை ஏக்கருக்கு 1 கிலோ என்ற விகிதத்தில் தெளிக்க வேண்டும். நூற்புழுவின் தாக்கத்தை குறைக்க செண்டுமல்லியை நடவு செய்து பூக்கும் தருணத்தில் மண்ணில் இட வேண்டும். ஏனெனில் இதில் இருந்து சுரக்கக்கூடிய திரவங்கள் நூற்புழுவை குறைக்க வழிவகை செய்யும். ரசாயன பூச்சிக்கொல்லியான கார்போபியூரான் குருணை ஒரு செடிக்கு 2 கிராம் வீதம் இட்டு நீர் பாய்ச்ச வேண்டும்.

அறுவடை

3 மாதத்தில் பூக்கள் பறிப்பதற்கு தயாராகிவிடும். ஆகஸ்டு மற்றும் செப்டம்பர் மாதங்களில் அதிகமாக மலர்கள் பூக்கும். காலை 8 மணிக்குள் பூக்களை பறிக்க வேண்டும். ஒரு ஹெக்டருக்கு 14 முதல் 15 டன் மலர்கள் கிடைக்கும்.

மேற்கண்ட தொழில்நுட்பத்தை பயன்படுத்தி சம்பங்கி மலர் சாகுபடியில் பூச்சி, நோய் மேலாண்மை முறைகளை பின்பற்றி நூற்புழுவின் தாக்கத்தையும் கட்டுப்படுத்தி அதிக மகசூல் பெற்று பயன்அடையலாம்.

**876 சிறப்பு முகாம்களில் 8 லட்சம் கால்நடைகளுக்கு இலவச சிகிச்சை நாமக்கல் கலெக்டர் தட்சிணாமூர்த்தி தகவல்**



நாமக்கல் மாவட்டத்தில் கடந்த 4 ஆண்டுகளில் நடைபெற்ற 876 சிறப்பு முகாம்கள் மூலம் 8 லட்சத்திற்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு இலவச சிகிச்சை அளிக்கப்பட்டு இருப்பதாக கலெக்டர் தட்சிணாமூர்த்தி கூறினார். கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம்

நாமக்கல் மாவட்டம் புதுச்சத்திரம் ஊராட்சி ஒன்றியம், எஸ்.உடுப்பம் ஊராட்சிக்கு உட்பட்ட கொசவம்பட்டியில் கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம் நடைபெற்றது. இம்முகாமிற்கு மாவட்ட கலெக்டர் தட்சிணாமூர்த்தி தலைமை தாங்கி, கால்நடைகளுக்கு குடற்புழு நீக்க மருந்துகளை வழங்கி, தொடங்கி வைத்தார். பின்னர் அவர் கூறியதாவது :-

கால்நடை மருத்துவ வசதி கிடைக்கப் பெறாத கிராமங்களில் கால்நடைகளின் நலனை பாதுகாத்திடும் பொருட்டு, கால்நடை பாதுகாப்புத்திட்ட முகாம்களை நடத்திட முதல்-அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டு உள்ளார். அதன்படி நாமக்கல் மாவட்டத்தில் உள்ள 15 ஊராட்சி ஒன்றியங்களில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் தலா 14 முகாம்கள் வீதம் 219 முகாம்கள் இந்த ஆண்டு (2015-16) நடத்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது.

8 லட்சம் கால்நடைகளுக்கு சிகிச்சை

கடந்த 4 ஆண்டுகளில் நடத்தப்பட்ட 876 கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம்களில் 8 லட்சத்து 31 ஆயிரத்து 87 கால்நடைகளுக்கு பல்வேறு சிகிச்சைகள் இலவசமாக அளிக்கப்பட்டு உள்ளது. குறிப்பாக இந்த கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம்களில் குடற்புழு நீக்கம், மலடு நீக்கம், ஆண்மை நீக்கம், செயற்கைமுறை கருவூட்டல் உள்ளிட்ட பல்வேறு சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளது. தற்போது இந்த கால்நடை பாதுகாப்பு தி¢ட்ட முகாமில் ஆடுகள், மாடுகள் என மொத்தம் 1239 கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு உள்ளது.

இந்த கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம்களை கால்நடை வளர்ப்போர் முழுமையாக பயன்படுத்திக் கொண்டு தாங்கள் வளர்க்கும்

கால்நடைகளை கட்டாயம் அழைத்து வந்து இலவச சிகிச்சை பெற்று பயன் அடையுமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு கலெக்டர் தட்சிணாமூர்த்தி கூறினார்.

பரிசு

மேலும், இந்த கால்நடை பாதுகாப்பு திட்ட முகாமில் பங்கேற்ற 3 சிறந்த கன்றுகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அதற்கான பரிசுகளை அக்கால்நடை உரிமையாளர்களிடம் கலெக்டர் வழங்கினார்.?இம்முகாமில் கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் டாக்டர்.பி.சக்திவேல், உதவி இயக்குநர்கள் ஜனகராஜ், பாஸ்கர், ரவிச்சந்திரன், கால்நடை உதவி மருத்துவர்கள், கால்நடை ஆய்வாளர்கள், கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**குன்னூரில் பருவநிலை மாற்றம்: தேயிலை செடிகளில் கொப்புள நோய் தாக்குதல்**



குன்னூரில் பருவநிலை மாற்றம் காரணமாக தேயிலை செடிகளில் கொப்புள நோய் தாக்குதல் ஏற்பட்டு உள்ளது.

தேயிலை விவசாயம் குன்னூர் பகுதியில் ஆயிரக்கணக்கான விவசாயிகள் தேயிலை விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த விவசாயிகள் பச்சை தேயிலையை கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளுக்கு வினியோகம் செய்து வருகின்றனர். தற்போது கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் பச்சை தேயிலை கிலோ ஒன்றுக்கு ரூ.6 முதல் ரூ.7 வரை மட்டுமே விலை கிடைத்து வருகிறது. இதனால் பச்சை தேயிலை பறிக்கும் தொழிலாளர்களுக்கு கூலி கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது. நீலகிரி மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் பச்சை தேயிலைக்கு போதிய விலை கிடைக்காததால் பெரும்பாலான தொழிலாளர்கள் வேலை தேடி பிற மாவட்டங்களுக்கு இடம் பெயர்ந்து செல்கின்றனர். கொப்புள நோய்

இந்த நிலையில் குன்னூரில் பருவநிலை மாற்றம் காரணமாக தேயிலை செடிகளில் கொப்புளநோய் தாக்கி வருகிறது. மேலும், கொப்புள நோய் தாக்கி உள்ள தேயிலை இலைகளை பெரும்பாலான தொழிற்சாலைகள் வாங்குவதுஇல்லை. இதனால் விவசாயிகள் பொருளாதார நெருக்கடியில் சிக்கி தவித்து வருகிறார்கள். பச்சை தேயிலைக்கு குறைந்த விலை கிடைத்து வரும் நிலையில், தேயிலை செடிகளை கொப்புள நோய் தாக்கி வருவதால் மிகுந்த நஷ்டம் ஏற்பட்டு உள்ளதாக விவசாயிகள் கவலையுடன் தெரிவிக்கின்றனர். பருவநிலை மாற்றம்

இதுகுறித்து உபாசி மண்டல ஆராய்ச்சி மைய உதவி இயக்குனர் டாக்டர் உதயபானு கூறியதாவது:- குன்னூரில் இந்த ஆண்டில் ஜனவரி மாதம் முதல் ஜூலை மாதம் 21-ந் தேதி வரை 110 சென்டி மீட்டர் மழை பெய்து உள்ளது.

இதே காலக்கட்டத்தில் கடந்த ஆண்டு 52 சென்டி மீட்டர் மழை பெய்து உள்ளது. தற்போது பருவநிலையில் அடிக்கடி மாற்றம் ஏற்பட்டு வருவதால் தேயிலை செடியில் கொப்பள நோய் மற்றும் இலைப்பேன் தாக்குதல் தென்பட்டு வருகிறது. இதனை கட்டுப்படுத்த உபாசி ஆராய்சி மையத்தை விவசாயிகள் அணுக வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## இலவச காளான் வளர்ப்பு பயிற்சி



திருப்பத்தூர் அருகே உள்ள பிள்ளையார்பட்டி பஞ்சாப் நேஷனல் வங்கி உழவர் பயிற்சி மையத்தில் இலவச காளான் வளர்ப்பு பயிற்சி முகாம் நடைபெற்றது. முகாமிற்கு அதன் இயக்குனர் குறிஞ்சிநாதன் தலைமை தாங்கினார். பயிற்சியினை புதுக்கோட்டை பயிற்றுநர் சாலைவள்ளான் நடத்தினார். பயிற்சியில் காளானின் முக்கியத்துவம், தன்மைகள், ரகம் ஆகியவை குறித்து விரிவாக எடுத்துக் கூறப்பட்டது. மேலும் காளான் படுக்கை தயாரிக்கும் முறைகள் மற்றும் காளான் வளர்ப்பில் ஏற்படும் பிரச்சினைகள் குறித்தும், அதனை தீர்க்கும் வழி முறைகள் குறித்தும் விரிவாக எடுத்து கூறப்பட்டது. பயிற்சியில் 110 பேர்கள் கலந்து கொண்டனர்.

**தஞ்சையில் இருந்து திருவள்ளூருக்கு அரவைக்காக 1,070 டன் நெல் சரக்குரெயிலில் அனுப்பப்பட்டது**



தஞ்சை மாவட்டத்தில் ஆண்டுதோறும் குறுவை, சம்பா, தாளடி என முப்போகம் நெல் சாகுபடி செய்யப்படுவது வழக்கம். கடந்த ஆண்டு சாகுபடி செய்யப்பட்ட குறுவை நெல், அறுவடை செய்யப்பட்டது. இப்படி அறுவடை செய்யப்பட்ட நெல், விவசாயிகளிடம் இருந்து நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் பெறப்பட்டு பிள்ளையார்பட்டி, புனல்குளம், வீரமரசன்பேட்டை ஆகிய பகுதிகளில் உள்ள சேமிப்பு கிடங்குகளில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இந்த நெல் அரவைக்காக பிற மாவட்டங்களுக்கு கொண்டு செல்லப்படுவது வழக்கம். அதன்படி சேமிப்பு கிடங்குகளில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த நெல் மூட்டைகள் அரவைக்காக லாரிகளில் ஏற்றப்பட்டு, தஞ்சை ரெயில் நிலையத்திற்கு நேற்றுகாலை கொண்டு வரப்பட்டன. பின்னர் லாரிகளில் இருந்த நெல்மூட்டைகளை தொழிலாளர்கள் சரக்குரெயிலில் ஏற்றினர். மொத்தம் 28 வேகன்களில் 1,070 டன் நெல் ஏற்றப்பட்டது. பின்பு நெல்

மூட்டைகள் ஏற்றப்பட்ட இந்த வேகன்கள் தஞ்சையில் இருந்து திருவள்ளூருக்கு அரவைக்காக அனுப்பி வைக்கப்பட்டது.

**தென்னை வணிக வளாகத்தில் தேங்காய் கொள்முதல் 29-ந் தேதி தொடங்குகிறது**




பட்டுக்கோட்டை தென்னை வணிக வளாகத்தில் தேங்காய் கொள்முதல் வருகிற 29-ந் தேதி தொடங்குகிறது.

இது குறித்து தஞ்சாவூர் வேளாண்மை துணை இயக்குனர் (வேளாண் வணிகம்) ஆர்.கலியராஜ், வணிகத்துக்கான வேளாண்மை அலுவலர் எஸ்.மாலதி ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

புதன்கிழமை

பட்டுக்கோட்டை, பேராவூரணி, சேதுபாவாசத்திரம், மதுக்கூர், ஒரத்தநாடு மற்றும் திருவோணம் வட்டாரங்களில் ஏறத்தாழ 35ஆயிரம் எக்டேர் பரப்பளவில் தென்னை சாகுபடி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இங்கு உற்பத்தி செய்யப்பட்டு தேங்காய்கள் தேங்காயாகவோ,

கொப்பரையாகவோ உள்ளூர் வியாபாரிகள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. கடந்த 2 வருடங்களாக உச்சத்தில் இருந்த தேங்காய் விலை தற்போது சரிந்து கொண்டிருக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இந்த விலை வீழ்ச்சியால் தென்னை விவசாயிகள் பாதிக்கப்படாமல் இருக்க வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் கீழ் பட்டுக்கோட்டையில் செயல்படும் தென்னை வணிக வளாகத்தில் உரித்த தேங்காய்கள் மற்றும் கொப்பரை ஆகியவற்றை கொள்முதல் செய்யும் பணி 2015-160-ம் ஆண்டுக்கு புதன்கிழமைதோறும் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. அதிகபட்ச விலை இதன் மூலம் விவசாயிகள் நேரிடையாக வணிகர்களிடம் தங்கள் தேங்காய்களை விற்பனை செய்யலாம். மறைமுக ஏலம் மூலம் விற்பனை மேற்கொள்வதால் விவசாயிகளுக்கு அதிகபட்ச விலை கிடைக்க வாய்ப்புள்ளது. இதில் தரகு, கமிஷன் இல்லை. லாபக்காய் பெறுவதும் இல்லை. உடனடி பணப்பட்டுவாடா செய்யப்படும். விவசாயிகள் தங்களது தேங்காய்களை இருப்பு வைத்து விற்பனை செய்ய கிடங்கு வசதியும் உண்டு. எனவே பட்டுக்கோட்டை சுற்று வட்டார தென்னை விவசாயிகள் வருகிற 29-ந் தேதி(புதன்கிழமை) பட்டுக்கோட்டை பொன்னவராயன்கோட்டை தென்னை வணிக வளாகத்தில் தொடங்க உள்ள தேங்காய் மற்றும் கொப்பரை மறைமுக ஏலத்தில் கலந்து கொண்டு தங்கள் விளைபொருளுக்கு நல்ல விலைபெறலாம். மேலும் ஒவ்வொரு வாரம் புதன்கிழமை தோறும் ஏலம் நடைபெற இருப்பதால் அதற்கேற்ப விவசாயிகள் தங்கள் தேங்காய் மற்றும் கொப்பரைகளை கொண்டுவர உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு அந்த அறிக்கையில் அவர்கள் கூறியுள்ளனர்.

**குறைந்த விலையில் உரம் என்ற கவர்ச்சியான அறிவிப்புகளை நம்பி விவசாயிகள் ஏமாற வேண்டாம் வேளாண்மை அதிகாரி அறிவுரை**




தேனி

குறைந்த விலையில் உரம் தருகிறோம் என்ற கவர்ச்சியான அறிவிப்புகளை நம்பி விவசாயிகள் ஏமாற வேண்டாம் என்று வேளாண்மை தரக்கட்டுப்பாட்டு அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து தேனி வேளாண்மை தரக்கட்டுப்பாடு உதவி இயக்குனர் ஜெயப்பாண்டியன் கூறியதாவது:–

<u>கண்காணிப்பு குழு</u>

விவசாயிகள் தாங்கள் சாகுபடி செய்துள்ள பயிர்களுக்கு வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை அலுவலர்கள் பரிந்துரை செய்யும் அளவில், பரிந்துரை செய்யும் உரம் மற்றும் பூச்சிக் கொல்லி மருந்துகளை பயன்படுத்த வேண்டும். அங்கீகாரம் பெற்ற, விற்பனைக்கான உரிமம் பெற்ற கடைகளில் மட்டுமே உரம், பூச்சி மருந்துகளை வாங்கி பயன்படுத்த வேண்டும்.

தனியார் சிலர் அனுமதியின்றி பூச்சிக் கொல்லி மருந்து மற்றும் போலியான உரம் தயாரிப்பு செய்து விற்பனை செய்வதாக

விவசாயிகளிடம் இருந்து புகார்கள் வந்தன. இதையடுத்து மாவட்ட கலெக்டர் வெங்கடாசலம் உத்தரவின்பேரிலும், வேளாண்மை இணை இயக்குனர் வெங்கடசுப்பிரமணியன் அறிவுரையின் பேரிலும் உரம் கண்காணிப்பு குழு அமைத்து தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

போலி உரம்

சிலர், வெளி மாநிலங்களில் இருந்து வரி இல்லாமலும், விற்பனை ரசீது இல்லாமலும் உரம் வந்து உள்ளதால் அதனை குறைந்த விலைக்கு தருகிறோம் என்று விவசாயிகளை நம்ப வைத்து விற்பனை செய்து வருவதாக தகவல்கள் கிடைத்து உள்ளன.

விற்பனை உரிமம் இல்லாமலும், உரிய ரசீது இல்லாமலும் போலி உரம் விற்பனை செய்யப்பட வாய்ப்புகள் உள்ளன. தேனி மாவட்டத்தில் இதுபோன்ற கவர்ச்சிகரமான அறிவிப்புகளை நம்பி களைக்கொல்லி வாங்கி பயன்படுத்திய ஒரு விவசாயியின் நிலத்தில் நெற்பயிர்கள் கருகியுள்ளன. இதுபோன்ற அறிவிப்புகளை நம்பி விவசாயிகள் ஏமாற வேண்டாம். இதுபோன்று யாரேனும் கவர்ச்சிகரமான அறிவிப்புகளை கூறினால், அதுகுறித்து வேளாண்மை தரக்கட்டுப்பாடு உதவி இயக்குனர் அலுவலகத்திற்கு தகவல் கொடுக்க வேண்டும். உரம், பூச்சிக்கொல்லி மருந்துகளை வாங்கும் போது விவசாயிகள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும்.

இவ்வாறு உதவி இயக்குனர் ஜெயப்பாண்டியன் கூறினார்.

**திருச்சி மணிகண்டம் பகுதியில் காய்கனி, மலர்களுக்காக ரூ.77 கோடியில்**

**மத்திய வணிக வளாகம் கட்டும் பணிகள் தொடங்கியது**



திருச்சி மணிகண்டம் பகுதியில் ரூ.77 கோடியில் காய்கனிகள், மலர்களுக்கான மத்திய வணிக வளாகம் கட்டும் பணிகள் தொடங்கியது. போக்குவரத்து நெருக்கடி திருச்சி நகரின் மைய பகுதியில் காந்தி மார்க்கெட் உள்ளது. இந்த மார்க்கெட்டுக்கு லாரிகள் மற்றும் வாகனங்கள் வருவதால் அடிக்கடி போக்குவரத்து நெருக்கடி ஏற்படுகிறது. இந்த பிரச்சினையை தீர்க்க காந்தி மார்க்கெட்டை திருச்சி நகருக்கு வெளியே அமைக்க வேண்டும் என்று பொதுமக்கள் நீண்ட நாட்களாக கோரிக்கை வைத்து உள்ளனர். மத்திய வணிக வளாகம்

இந்த கோரிக்கையை ஏற்ற முதல்- அமைச்சர் ஜெயலலிதா கடந்த 30-6-2014 அன்று ஸ்ரீரங்கத்தில் நடைபெற்ற அரசு விழாவில் திருச்சி- மதுரை சாலையில் மணிகண்டம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் எதிரே கள்ளிக்குடி ஊராட்சியை சேர்ந்த பகுதியில் ரூ.77 கோடியே 6 லட்சம் திட்ட மதிப்பீட்டில் காய்கனிகள் மற்றும் மலர்களுக்கான மத்திய வணிக வளாகம் அமைக்கப்படும் என அறிவித்து அந்த திட்டத்திற்கு அடிக்கல்

நாட்டினார். அந்த விழாவில் ஜெயலலிதா பேசும்போது, 9.79 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்படும் இந்த வணிக வளாகத்தில் 1000 கடைகள், 2 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதன கிடங்கு, தரம் பிரித்து வகை படுத்தும் களம், தரம் பிரித்து சிப்பமிடும் கருவி, அகலமான உட்புற சாலைகள் போன்ற நவீன உள் கட்டமைப்பு வசதிகளும் ஏற்படுத்தப்படும் என குறிப்பிட்டார். பணிகள் தொடங்கியது ஜெயலலிதா அறிவிப்பின்படி மணிகண்டம் பகுதியில் காய்கனிகள் மற்றும் மலர்களுக்கான மத்திய வணிக வளாகத்தின் கட்டுமான பணிக்கு கடந்த 15-ந் தேதி பூமி பூஜை போடப்பட்டது. இதனை தொடர்ந்து கட்டுமான பணிகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன. இந்த வணிக வளாகத்தில் வேன், லாரிகள் உள்பட வாகனங்கள் நிறுத்தும் இடம், விவசாயிகள் தங்கும் அறைகள், வங்கி, உணவு கூடம், எடை மேடை, நிர்வாக அலுவலகம், ஆண்கள், பெண்களுக்கு தனித்தனியாக கழிப்பறை ஆகிய வசதிகள் செய்யப்பட உள்ளது. இந்த கட்டுமான பணிகள் ஓராண்டு காலத்தில் நிறைவு பெறும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

**திருவள்ளூரில் பலத்த மழை**



திருவள்ளூர்

திருவள்ளூர் சி.வி.நாயுடு சாலை, ஜே.என்.சாலை, ஆயில்மில், மணவாளநகர், அரண்வாயல், திருமழிசை, வெள்ளவேடு, திருப்பாச்சூர், காக்களுர், கடம்பத்தூர், பேரம்பாக்கம், மப்பேடு, திருவாலங்காடு, ஈக்காடு போன்ற பகுதிகளில் நேற்று பலத்த மழை பெய்தது.

இதனால் சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது.

தினகரன்

**கத்தரி பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம்**

ரிஷிவந்தியம், : ரிஷிவந்தியம் ஒன்றியத்திற்கு உட்பட்ட எடுத்தனூர், பெரியபகண்டை, ஏந்தல், யால் ஆகிய பகுதிகளில் விவசாயிகள், பருவமழை பொய்த்ததால் அண்டை மாநிலங்களான ஆந்திர, கேரளா, கர்நாடகா பகுதிகளக்கு சென்று கூலி வேலை செய்து வந்தனர். இந்நிலையில் தற்போது கடந்த ஒரு மாதமாக ரிஷிவந்தியம் ஒன்றியம் பகுதிகளில் லேசான மழை பெய்து வருவதால் விவசாயிகள் நெல், கம்பு, சோளம், கரும்பு பயிர்களுக்கு மாற்றாக குறைந்த முதலீட்டில் அதிக லாபம் தரும் கத்தரிக்காய் பயிரிடுவதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

மேலும் கத்தரி பயிரிட்ட இரண்டு மாதங்களில் பூ பூத்து காய் வைக்க ஆரம்பித்து விடுகிறது. பின்னர் வாரத்திற்கு இரு முறை கத்திரிக்காய் பரிக்கப்படுகிறது. இந்த பகுதியில் உஜாலா, பவானி ஆகிய இரு ரக கத்தரிக்காய் பயிரிடப்படுகின்றன. மேலும் கத்தரி செடி பூ விடும் போது மட்டும் நோய் வராமல் தடுக்க பூச்சி மருந்து அடிப்பதில் அதிக கவனம் இருக்க வேண்டும் என்று விவசாயி தெரிவித்தார். இங்கு அறுவடை செய்யப்படும் கத்தரிகாய் நேரடியாக சென்னை கோயம்பேடு மார்க்கெட்டுக்கு விற்பனை செய்ய அதிக விலைக்கு எடுக்கப்படுவதாகவும் விவாசாயி தெரிவித்தனர்.

**தா.பழூர் வட்டாரத்தில் குறுவை சாகுபடிக்கு இலவச ஜிப்சம் வழங்கல்**

அரியலூர், : தா.பழூர் வட்டாரத்தில் குறுவை சாகுபடிக்கு விவசாயிகளுக்கு இலவச ஜிப்சம் வழங்கும் நிகழ்ச்சி நடைப்பெற்றது.அரியலூர் மாவட்டம் தா.பழூர் வட்டாரத்தில் குறுவை சாகுபடி செய்த டெல்டா பகுதி விவசாயிகளுக்கு ஜிப்சம் வழங்கும் நிகழ்ச்சி தா.பழூர் வட்டார வேளாண் அலுவலகத்தில் நடைப்பெற்றது. நிகழ்ச்சியில் தா.பழூர் ஒன்றியக்குழுத்தலைவர் ஜெய்சுதா சிவசுப்ரமணியன் விவசாயிகளுக்கு இலவச ஜிப்சம் வழங்கினார். தா.பழூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் பழனிசாமி தலைமை வகித்து பேசுகையில்,தா.பழூர் வட்டாரத்தில் 2 ஆயிரத்து 250 ஏக்கரில் குறுவை சாகுபடியை விவசாயிகள் மேற்கொண்டு வருகின்றனர். இதில் ஆயிரத்து 581 ஏக்கரில் நடவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு மகசூல் உயர்வு இடு பொருட்களுக்கான மானிய தொகை ஏக்கருக்கு ரூ.315 வீதம் உரிய விவசாயிகளின் வங்கி கணக்கிற்கு வரவு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் நெல் நடவு இயந்திரம் மூலம் நடவு செய்திட ஒரு ஏக்கருக்கு மானியத்தொகை ரூ.2 ஆயிரத்து 500 வீதம் 350 ஏக்கருக்கு விவசாயிகள் கண்டறியப்பட்டு சாதனை அடைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் ஜிப்சம் விநியோகம் ஒரு ஏக்கருக்கு 200 கிலோ வீதம் 750 ஏக்கருக்கு 150 மெட்ரிக் டன் பெறப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்சமயம் நெல் நாற்றுவிட உத்தேசித்துள்ள விவசாயிகள் ஜுலை 31க்குள் இயந்திர நடவிற்கு நாற்று விட்டால் ஆகஸ்ட் 20 தேதிக்குள் நடவு இயந்திர மூலம் நடவு செய்யலாம். இதன் மூலம் இத்திட்டத்தின் கீழ் ஒரு ஏக்கருக்கு ரூ.2 ஆயிரத்து 500 பெற வாய்ப்புள்ளது என்றார். நிகழ்ச்சியில் தா.பழூர் வட்டாரத்தை சேர்ந்த 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை தா.பழூர் வேளாண் அலுவலர் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர்கள் செய்திருந்தனர்.

**படித்த இளைஞர்கள் விவசாய தொழிலில் ஈடுபட முன்வர வேண்டும் இயற்கை மருத்துவர் அழைப்பு**

திருவாரூர், : திருவாரூர் மாவட்டம் குடவாசல் அருகே மஞ்சக்குடி சுவாமி தயானந்தா பள்ளியில் இயற்கை வேளாண்மை மற்றும் பழந்தமிழ் நெல்வகைகள் குறித்த கருத்தரங்கம் நடந்தது. பள்ளி நிர்வாக அறங்காவலர் ஷீலாபாலாஜி தலைமை வகித்தார். ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலைய இயக்குனர் ரவி, நபார்டு வங்கி உதவி பொது மேலாளர் ரவிசங்கர், பூச்சியியல் வல்லுநர் செல்வம், இயற்கை வேளாண் வல்லுனர் சித்தர், சுவாமி தயானந்தா கல்லூரி முதல்வர் வாசுதேவன், நமது நெல்லை காப்போம் மாநில ஒருங்கிணைப்பாளர் நெல் ஜெயராமன், இயற்கை உழவர் இயக்கத்தை சேர்ந்த வரதராஜன், அனைத்து விவசாயிகள் சங்க தலைவர் பாண்டியன் உட்பட பலர் கலந்து கொண்டனர். இயற்கை வேளாண்மையில் இளைஞர்களின் பங்கு என்ற தலைப்பில் இயற்கை மருத்துவர் சித்தர் பேசியதாவது: இயற்கை விவசாயம் மூலம் உற்பத்தி செய்யப்படும் அரிசி, கீரை, சிறுதானியம் போன்ற பொருட்கள் மனிதனின் உயிரை காக்கக் கூடியவையாக உள்ளன. மாப்பிள்ளை சம்பா என்று அழைக்கப்படும் நெல்வகை மனிதனுக்கு ஏற்படும் பக்கவாதம், நரம்பு தளர்ச்சி போன்ற நோய்கள் வராமல் காக்கும் குணம் கொண்டவை. கைகுத்தல் அரிசியில் பி.காம்ப்ளக்ஸ் எனப்படும் சத்து அதிகமாக உள்ளது. இதேபோல் விலைமலிவாக கிடைக்கும் கத்தரிக்காய்களிலும் பி.காம்ளக்ஸ் சத்து அதிகமாக இருப்பதால் அதனை சாப்பிட்டால் அரிப்பு நோய் வரும் என்ற மூடநம்பிக்கையை மக்கள் கைவிட வேண்டும்.

பூச்சி கொல்லி மருந்துக்கு மானியம் அளிக்கும் அரசுகள் உயிரை காக்ககூடிய கைக்குத்தல் அரிசி, வெல்லம் போன்ற பொருட்களுக்கு மானியம் வழங்க முன்வராதது வருத்தம் அளிக்கும் வகையில் உள்ளது. வேளாண் துறையை மத்திய, மாநில அரசுகள் அதிக அளவில் ஊக்குவித்தால் தற்போது இந்தியாவில் உள்ள மக்கள் தொகையைவிட

கூடுதலாக 120 கோடி பேருக்கு வேலைவாய்ப்பினை அளிக்கும் துறையாக வேளாண்துறை அமையும். மேலும் அதிக லாபம் ஈட்டவும், இயற்கை விவசாயத்தின் மூலம் உயிரை காக்கக்கூடிய விவசாய பொருட்களை உற்பத்தி செய்யவும் படித்த இளைஞர்கள் விவசாய தொழிலில் ஈடுபட முன்வர வேண்டும் என்றார்.

கல்வியியல் கல்லூரி மாணவிகள் சாதனை
மயிலாடுதுறை, . நாகை மாவட்டம் மயிலாடுதுறை குட் ஷமாரிட்டன் கல்வியியல் கல்லூரி மாணவிகள் 201415ம் ஆண்டிற்கான தேர்வில் கல்லூரி அளவில் அபிராமி (1018), ஆஷா (1015), சுகன்யா (1013) மதிப்பெண்களைப் பெற்று முறையே மூன்று இடங்களைப் பெற்று சாதனை படைத்தனர். தேர்வில் வெற்றிபெற்ற மாணவிகளுக்கு கல்லூரி தாளாளர் ராதாகிருஷ்ணன், செயலர் அனிதா ராதாகிருஷ்ணன் ஆகியோர் பாராட்டுக்களைத் தெரிவித்தனர்.

**க.பரமத்தி ஒன்றியத்தின் 3 ஊராட்சிகளில் இலவச ஆடு பெற விண்ணப்பிக்க இன்று கடைசி நாள்**

க.பரமத்தி, : 3ஊராட்சிகளில் இலவச ஆடுகள் திட்டத்தில் விண்ணப்பிக்க இன்று 22ம் தேதி கடைசி என்று அறிவிக்கப்பட்டுள்ளது.க.பரமத்தி ஒன்றியத்தில் தொக்குப்பட்டி ஊராட்சியில் 32பேருக்கு , தென்னிலை மேற்கு ஊராட்சியில் 53 பேருக்கு, துக்காச்சி ஊராட்சியில்26 பேருக்கு என 3 ஊராட்சிகளிலும் மொத்தம் 111 பயனாளிகளுக்கு இலவச ஆடுகள் வழங்கப்பட உள்ளது.இந்த இலவச ஆடு வழங்கும் திட்டத்திற்காக கடந்த 16ம் தேதி தொக்குப்பட்டி, தென்னிலை மேற்கு, துக்காச்சி ஆகிய ஊராட்சிகளில் கிராம சபை கூட்டம் நடத்தப்பட்டு இந்த திட்டத்தில் பயன்பெற தகுதியானவர்கள் விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டு விண்ணப்பங்கள் விநியோகிக்கப்பட்டன.
இந்நிலையில் இதில் விண்ணப்பிக்க தவறியவர்கள் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் விண்ணப்ப படிவங்களை பூர்த்தி செய்து இன்று 22ம்

தேதி மாலை 5மணிக்குள் தங்களுக்கு உரிய ஊராட்சிக்குட்பட்ட அலுவலகத்தில் வழங்க வேண்டும எனவும், அதற்கு மேல் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படாது என ஊராட்சி நிர்வாகம் மற்றும் கால்நடை மருந்துவ அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**24ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

புதுக்கோட்டை, : புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் 24ம் தேதி காலை 10 மணியளவில் புதுகை மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் கலெக்டர் கணேஷ் தலைமையில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் பல்வேறு துறை அரசு அலுவலர்கள் கலந்துகொண்டு விவசாயிகளின் விவசாயம் சம்பந்தப்பட்ட கோரிக்கைகளுக்கு பதில் அளிக்க உள்ளார்கள். எனவே புதுகை மாவட்ட விவசாயிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு விவசாயம் தொடர்புடைய கோரிக்கைகளை தெரிவித்து பயன்பெறுமாறு மாவட்ட நிர்வாகம் சார்பில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

**தொடரும் பருவமழை கீழ்நீராரில் 43மிமீ பதிவு**

பொள்ளாச்சி, : பொள்ளாச்சி மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமங்களில், கடந்த சில நாட்களாக பருவமழை விட்டு, விட்டு பெய்து வருகிறது. இதனால், ஆழியார் மற்றும் பரம்பிக்குளம் அணைகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. தற்போது, பரம்பிக்குளம் அணைக்கு வினாடிக்கு 957கனஅடி தண்ணீர் வரத்து உள்ளது, நீர்மட்டம் 27அடியாக உயர்ந்துள்ளது. அதுபோல், ஆழியார் அணைக்கு வினாடிக்கு 450கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையின் நீர்மட்டம் 114அடியாக உயர்ந்துள்ளது. மேற்குதொடர்ச்சி மலைபகுதியில் நேற்று பெய்த மழையளவு வருமாறு: பரம்பிக்குளம் 13மிமீ, ஆழியார் 4மிமீ, மாக்கினாம்பட்டி(பொள்ளாச்சி) 10மிமீ, மணக்கடவு 26மிமீ, மேல்நீரார் 24, கீழ்நீரார் 43, சர்க்கார்பதி 5, தூணக்கடவு 3, பெருவாரிபள்ளம் 4மிமீ,

காடம்பாறை 4மிமீ, நவமலை 4மிமீ என்ற அளவில் மழை பதிவாகியுள்ளது.

**ரூ.5.15லட்சத்துக்கு கொப்பரை ஏலம்**

ஆனைமலை, : பொள்ளாச்சியை அடுத்த ஆனைமலை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், நேற்று கொப்பரை ஏலம்நடந்தது. இதில் ஆனைமலை, வேட்டைக்காரன்புதூர், ஒடையக்குளம் மட்டுமின்றி சுற்றுவட்டார கிராம பகுதிகளில் இருந்து, 41 விவசாயிகள் மொத்தம் 191 மூட்டை கொப்பரை கொண்டு வந்திருந்தனர். இதில் 110 மூட்டை முதல் தர கொப்பரையாகவும், 81மூட்டை இரண்டாம் தர கொப்பரையாகவும் தரம் பிரிக்கப்பட்டு ஏலம் விடப்பட்டது. முதல் தர கொப்பரை ஒருகிலோ ரூ.58.35முதல் ரு.65.35 வரையிலும், இரண்டாம் தர கொப்பரை ஒருகிலோ ரூ.43.70 முதல் ரூ.53.10 வரையிலும் ஏலம் போனது. விவசாயிகள் கொண்டு வந்த மொத்தம் ஒன்பதரை டன் கொப்பரை ரூ.5.15லட்சத்துக்கு ஏலம்போனது. இதை 5வியாபாரிகள் கொள்முதல் செய்தனர். சுற்றுவட்டாரத்தில் மழைப்பொழிவு இருப்பதால் நேற்று நடந்த ஏலத்தின்போது, கொப்பரை வரத்து குறைவாக இருந்ததாகவும். கடந்த வாரத்தை விட இந்த வாரம், ஒருகிலோவிற்கு ரூ.1.50 முதல் ரூ.2.75வரை கூடுதலாக ஏலம் போனதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

**கும்பகோணத்தில் பலத்த மழை**

கும்பகோணம், : கும்பகோணம் பகுதியில் கடந்த சில நாட்களாக வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது. இந்நிலையில் நேற்று மாலை திடீரென மேகமூட்டம் திரண்டு வந்து சுமார் ஒரு மணி நேரம் பலத்த மழை பெய்தது. இந்த மழையால் நகரில் தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கியது. திடீர் மழை பெய்து வெப்பம் தணிந்ததால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.இந்த மழை நடவு செய்யப்பட்டுள்ள குறுவை

நெற்பயிருக்கு ஏற்றதாகவும், அதே நேரத்தில் பருத்தி பஞ்சுக்கு கெடுதலாகவும் அமைந்தது.

**மகசூலை அதிகரிக்க சாகுபடிக்கு முன் பாசன நீர் ஆய்வு செய்வது அவசியம்விவசாயிகளுக்கு அழைப்பு**

சேதுபாவாசத்திரம் : விவசாயத்தில் மகசூலை அதிகரிக்க பாசன நீர் ஆய்வு செய்வது அவசியம் என்று விவசாயிகளுக்கு யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் பெரியசாமி, வேளாண்மை அலுவலர் பெரியசாமி வெளியிட்டுள்ள அறிக்கை: பாசனநீரில் உப்புத்தன்மை, களர்தன்மை என இருவகை உள்ளது. பாசனநீரில் கரையும் தன்மையுள்ள கால்சியம், மெக்னீசியம், சோடியம், பொட்டாசியம் தாதுக்களின் குளோரைடு, சல்பேட் அயனிகள் அதிகளவில் இருந்தால் உப்புத்தன்மையும், அதேபோல் சோடியம் கார்பனேட், சோடியம்பைகார்பனேட், மெக்னீசியம் கார்பனேட் உப்புகள் அதிகமிருந்தால் களர் தன்மையும் ஏற்படுகிறது. இதை கண்டறிய ஆய்வு செய்வது அவசியம். நீர் மாதிரி எடுப்பதற்கு சுத்தமான கண்ணாடி பாட்டில் அல்லது பாலத்தீன் பாட்டிலை உபயோகிக்க வேண்டும். மோட்டார் இணைக்கப்பட்ட கிணற்றில் 10 முதல் 30 நிமிடம் தண்ணீரை ஓடவிட்டு அந்த தண்ணீரிலேயே பாட்டிலை கழுவி மாதிரிக்காக அரை லிட்டர் தண்ணீர் எடுக்க வேண்டும். கண்மாய், குளங்களின் நீர்மாதிரி எடுக்கும்போது பாட்டிலின் வாயை கைவிரலால் மூடி மூழ்கடித்து மாதிரி எடுக்க வேண்டும். கமலை உள்ள கிணற்றில் ஒரு கமலைநீரில் மாதிரிக்காக நீர் சேகரிக்க வேண்டும். கயிறு கட்டி இறைக்கும் கிணற்றில் 2 அல்லது 3 வாலி தண்ணீர் இறைத்து பெரியவாலி சேகரித்து பின் மாதிரி எடுக்க வேண்டும். காலை 9 மணிக்குள் நீர்மாதிரி சேகரிக்க வேண்டும். நீர்மாதிரி எடுத்த பாட்டில்களை கண்டிப்பாக வெயிலில் வைக்கக்கூடாது.

தஞ்சை மாவட்டத்தை பொறுத்தவரையில் ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலையம் மற்றும் மண், நீர் ஆராய்ச்சி நிலையம் (தஞ்சாவூர்) காட்டுத்தோட்டம் ஆகிய இடங்களில் ஆய்வு செய்யப்படுகிறது. நீர்மாதிரி அனுப்பும்போது விவசாயியின் பெயர், கிராமம் மற்றும் முகவரி விவரம், கிணறு இருக்கும் நிலத்தின் சர்வே எண், திறந்த வெளிகிணறா, ஆழ்குழாய் கிணறா, குளமா, கண்மாயா, தண்ணீர் பாயும் நிலத்து மண்ணின் ஆய்வு விவரம் ஆகிய விவரங்கள் அனுப்ப வேண்டும்.

**வாடிப்பட்டியில் திருந்திய நெல்சாகுபடி**

வாடிப்பட்டி, : வாடிப்பட்டி வட்டாரத்தில் முதல் போக நெல்சாகுபடி துவங்கிய நிலையில் திருந்திய நெல்சாகுபடி திட்டத்தின் கீழ் இயந்திரம் மூலம் நாற்று நடவும் பணி துவங்கப்பட்டதுமுதல் போக நெல் சாகுபடிக்காக வைகை அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. காலதாமதமாக தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளதால் விவசாயிகள் முழுவீச்சில் பணியை துவக்கியுள்ளனர். இந்நிலையில் வாடிப்பட்டி வட்டார வேளாண்மை துறையின் மூலம் திருந்திய நெல் சாகுபடி திட்டத்தின்கீழ் வாடிப்பட்டி வட்டாரத்தில் 770 ஹெக்டேர் பரப்பளவில் நெல்சாகுபடி நடைபெறவுள்ளது. இத்திட்டத்தின் கீழ் இயந்திரம் மூலம் நாற்று நடும் பணியை மதுரை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சாரநாத்பாபு துவக்கி வைத்தார். பின்னர் பேசிய அவர் திருந்திய நெல்சாகுபடி முறையில் நெல்சாகுபடி செய்யும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் அரசின் மூலம் ஹெக்டேருக்கு ரூ.3ஆயிரம் மானியம் வழங்கப்படும் என தெரிவித்தார்நிகழ்ச்சியின் போது வேளாணமை இணை இயக்குநர் ரவிச்சந்திரன், தேசிய உணவு பாதுகாப்புத்திட்ட ஆலோசகர் ராதாகிருஷ்ணன், வேளாண்மை உதவி இயக்குநர் ராமநாதன், வேளாண்மை அலுவலர் மயில், துணை அலுவலர் முத்துப்பாண்டியன்

மற்றும் விவசாயிகள் சீனிவாசன், நடராஜன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.